விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 21 சனிக்கிழமை (06.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 261

## வடக்கிற்கு வந்த என்மீதும் புலனாய்வாளர் கண்காணிப்பு

### ஜேர்மனிய தூதுவர் முதலமைச்சரிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தான் விஜயம் செய்திருந்த போது தன்னையும் இராணுவப் புலனாய்வாளர்கள் பின்தொடர்ந்ததாக யாழ்வந்த ஜேர்மனிய தூதுவர் ஜஸ்ரின் மொஹறாட் யாழ்ப்பாணத்தில் வைத்து கூறியுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் நேற்று மதியம் 12.30 மணியளவில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவம் வெளிப்படையாக இயங்காமல் புலனாய்வுப்பிரிவினூடாக இயங்கி எமது ஒவ்வொரு அசைவுகளையும் கண்காணித்து வருகின்றதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜேர்மனிய தூதுவரிடம் முறையிட்டுள்ளார்.

மேலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு மாகாண சபையினை இயங்க விடாது வடக்கு மாகாண் ஆளுநரும் பிரதம செயலரும் இணைந்து செயற்படுவதாகவும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சந்திப்பு தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தைப் பற்றி அவர் கேட்டிருந்தார், இராணுவத்தின் உள்ளீடுகள் மிகவும் சூட்சமமான முறையில் நடைபெறுவதனை நான் அவருக்கு எடுத்துக் காட்டியிருந்தேன்.

அதவாது வெளியே தெரியும் விதமாக இராணுவம் இயங்காது தங்களுடைய புலனாய்வுப் பிரிவின் ஊடாக தான் எல்லா விடயங்களிலும் அவர்கள் தமது ஆதிக்கத்தை செலுத்தி வரு 20 ஆம் பக்கம் பார்க்க....

## வட மாகாண சபைக்கு அரசு முட்டுக்கட்டை

### அமெரிக்க பிரதிநிதியிடம் யாழ்.ஆயர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையை சுதந்திரமாக இயங்கவிடாமல் அரசாங்கம் முட்டுக்கட்டையாக இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பிரதி பிரதம திட்டப்பணிப்பாளர் அன்ரூ மன்னிற்கு எடுத்துக் கூறியதாக யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள அமெரிக்காவின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் அன்ரூமன் யாழ் இல்லத்திற 19 ஆம் பக்கம் பார்க்க....

## இறுதி யுத்தத்தில் ஐ.நா. தவறிழைப்பு

### உயிரிழப்பை தடுக்க முன்வரவில்லை - ரொய்ட்டர்

(கொழும்பு) இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் பொதுமக்களை பாதுகாக்க தவறியதன் மூலமாக ஐ.நா. தனக்கு வழங்கப்பட்ட ஆணையை நிறைவேற்ற தவறியுள்ளதாக இலங்கையின் இரு அமைப்புகளின் புதிய அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ் அறிக்கை பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தியதற்காக விடுதலைப்புலிகளை குற்றம் சாட்டுவதுடன் பொதுமக்களின் உயிரிழப்புகளுக்கு அவர்களே காரணம் எனத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மார்கா நிறுவகமும் மனிதாபிமான அமைப்புகளின் கூட்டமைப்பும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கியநாடுகளின் அமைப 19 ஆம் பக்கம் பார்க்க....

## தண்டனை தீர்மானம் ஜனாதிபதியிடம் விசாரணை செய்வது மட்டுமே நாம்

### கூறுகிறது ஜனாதிபதி ஆணைக்குழு

(கொழும்பு)

காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் விசாரணைகளை மாத்திரமே மேற்கொள்ள முடியும். தண்டனைகளை வழங்க முடியாது. அதனை ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும் என காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிபுணர்கள் தமது பணிகளை முன்னெ 19 ஆம் பக்கம் பார்க்க....

## கடற்தொழிலாளி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு கிராமத்திலிருந்து நேற்று முன்தினம் கடற்றொழிலுக்காகச் சென்றவர் நேற்று மண்டைதீவு கடற்பரப்பில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அல்லைப்பிட்டிக் கடற்பரப்பில் ஆட்களற்ற நிலையில் படகொன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்த நிலையில் நேற்றையதினம் மண்டைதீவுக் கடற்பரப் 19 ஆம் பக்கம் பார்க்க....

## பூரணமற்ற வசதிகளுடன் வடக்கு மக்கள் வாழ்வு



### விஜயத்தின் பின் பிரி.தூதுவர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்தகாலங்களிலிருந்து வடமாகாணம் விரைவாக மீண்டுகொண்டிருந்தாலும் இங்குள்ள மக்களும் அடிப்படை வசதிகள் பூரணப்படுத்தப்பட 19 ஆம் பக்கம் பார்க்க....

## இழந்த பல சந்தர்ப்பங்களை இனியும் தவறவிடக் கூடாது

### சர்வதேசத்துடன் ஒன்றிப்போம் என்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

நாம் கடந்த காலத்தில் கிடைத்த பல சந்தர்ப்பங்களை எமது வெற்றுக கோஷங்களாலும் கற்பனாவாதத்தாலும் இழந்திருக்கிறோம். இனியும் நாம் அப்படி இருந்துவிடமுடியாது.

முஸ்லிம் மக்களையும் எமது தாயகப் பிரதேசத்திலுள்ள அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து இறுதித் தீர்வுக்கான நடவடிக்கையை எடுப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு நேற்று மாலை 4.30 19 ஆம் பக்கம் பார்க்க....

சிகரம் மூலம் கனடா விசா
3 வருட Multiple Entry

சிகரம் மூலம் கனடா மாணவர் விசாவுக்கு விண்ணப்பித்த ஒருவர் தூதரக நேர்முகத்தேர்வு இல்லாமலே 3 வருட Multiple Entry Visa வென்றார்!

| UK, Australia, New Zealand, Switzerland, Canada பல்கலைக்கழக அனுமதி & விசா | Canada, Australia Skilled Migration | எந்த நாட்டுக்குமான Visit Visa, Work Visa, Visa Rejection Appeals |
|---|---|---|

நேரில் வந்து நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்கலைக்கழகங்கள், பெற்றுக்கொடுத்த விசாக்களை ஆராய்ந்த பின்னர் நீங்களும் விசா வெல்லலாம் !

சிகரம் இல.275, 2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி (வைத்தியசாலை பின்வீதி). தொ.பே. : 0773 616 798 www.sikaram.lk

## மக்கள் வழிபாட்டினை இராணுவத்தினர் தடுப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மக்களின்மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி நடைபெறவிருந்த வழிபாட்டினை இராணுவ புலனாய்வுப்பிரிவினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி முகாமில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து 24 வருடங்களிற்கு மேலாக தமது சொந்த இடங்களில் மீள்குடியமர முடியாமல் யுத்தம் முடிவடைந்த நிலையிலும் தற்காலிக முகாம்களில் இவ் மக்கள் அடிப்படை வசதிகள் எவையுமின்றி வாழ்ந்து வருகின்றனர்.

இம்மக்களுடைய நிலங்களினை இராணுவம் கையகப்படுத்தி வைதுள்ளதோடு அதில் தம்முடைய அபிவிருத்தி திட்டங்களினையும மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில் தமது நிலத்தினை விடுவிக்குமாறு போராட் 19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815 021 567 1532

ALL OUT
Pest control service
கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: ந.ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200
(7600)

CIMA
Chartered Institute of Management Accountants
@
ACCTECM
Lecturer from Colombo & Kandy
No.01, 2nd lane, Power house Road, Jaffna.
T.P:021 221 7733/0779895183
(7576)


## ஐ.தே.க முறைப்பாடு

(பதுளை)

ஊவா மாகாணத்தில் இடம்பெறும் தேர்தல் வன்முறைகளுக்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து ஊவா மாகாணத்தில் தேர்தல் வன்முறைகள் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளதாகவும் அண்மைய காலமாக வன் முறைகள் உச்சத்தை எட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (செ-11)


A/L 2015,2016
தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களே!
மீண்டும்ஆரம்பத்திலிருந்து
தொடர் செய்முறைப் பயிற்சிகள்

பொறியியல் தொழில்நுட்பம்
- மின்னியல்
- இலத்திரனியல்
- நில அளவையும் மட்டப்படுத்தலும்
- கட்டிட நிர்மாணம்
- இயந்திரப் பொறியியல்

உயிர்முறைமைகள் தொ/நு
- நிலஅளவையும் மட்டப்படுத்தலும்
- அலகுரீதியான தனித்தனி செய்முறைப் பயிற்சிகள்

போயா தினங்களில் மாதிரி செய்முறை பரீட்சைகள் நடைபெறும்

செய்முறைப் பரீட்சைக்கு ஏற்றவகையில் மாணவர்கள் தயார்ப்படுத்தப்படுவர்

இவை அனைத்தும்
விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரியில்
மாத்திரமே

தொடர்புகளுக்கு : 021 320 7315
077 2487774


A/L தொழில்நுட்பப் பிரிவிற்கு
தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்
இல.475 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் (வண்ணார் பண்ணை சிவன்கோவிலடி)

Chemistry இரசாயனவியல் A/L 2015, 2016
மற்றும் Day Class வகுப்புக்கள்
English & Tamil Mediam
ஆரம்பம் 6.9.2014
A.Aravinthan
Bsc(Hons) Spl.Chem
(7599)


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி நாகேந்திரம்

(முன்னாள் ப.நோ.கூ.ச முகாமையாளர்- எழுதுமட்டுவாழ்)



யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகேந்திரம் (முன்னாள் ப.நோ.கூ.ச முகாமையாளர் எழுதுமட்டுவாழ்) 02.09.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கனகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சிவயோகநாயகியின் அன்புக் கணவரும், அண்ணாத்துரை, பிரதீபன் (நியூசிலாந்து), சுகன்யா (நோர்வே), சோபனா (லண்டன்) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற நாகராசா (பிரபல சட்டத்தரணி, முன்னாள் யாழ்.நகரமேயர்), காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் நாகபூசணி (அமெரிக்கா), நாகலிங்கம் (லண்டன்), நாகேஸ்வரன் (வவுனியா), நாகபாலன் (லண்டன்), நாகதேவி (பொட்ஸ்வானா), நாகலட்சுமி (நியூசிலாந்து), நாகநாதன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வனஜா, கவிதா, இந்திரன், செல்வகுமார் ஆகியோரின் மாமனாரும், மதுமிதா, தர்மிகா, றெஸ்மி, சுவேத்தா, அபிதா, றிகேஷ், விகாஷ், சேயோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பகல் 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
சி.நாகநாதன் (சகோதரன்)
(ரஞ்சன்)

271, பலாலி றோட்,
ஆலடிச்சந்தி,
கந்தர்மடம்.

(7596)


## யாழ்ப்பாண மாநகரசபை
## பகிரங்க ஏலம்

- யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலை
  ஆரம்ப கேள்வித் தொகை - 75000/= (Vat நீங்கலாக)
  குத்தகைக்காலம் 15.09.2014 - 31.12.2014
- மாநகர சபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலை
  ஆரம்ப கேள்வித்தொகை - 45000/= ( Vat நீங்கலாக)
  குத்தகைக் காலம் 15.09.2014 - 31.12.2014 வரை
- பழைய ரயர்கள், பாவிக்கப்பட்ட மேசைகள்

**கேள்வித் திகதி : 15.09.2014 காலை 11 மணி**

ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்
(சி-8423)


வடமராட்சியில் தூரிகையின்
அழகுக் கலை, மனையியற் கலை
பயிற்சி வகுப்புக்கள்



ஃபேஷியல்,
கேக் ஐசிங்,
தையல்
மணப்பெண் ஒப்பனை


மற்றும் எமது வழமையான மகளிர்க்கான
பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளன

மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள......
தூரிகை - 021 491 9687 அல்லது இயக்குநர் S.ரகு- 077 914 3171
தொ.பே. இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம்.
தூரிகை – மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி.
(சி-8428)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF ARTS

University of Jaffna will entertain applications up to 19.09.2014 from suitably qualified persons for the under mentioned posts.

(i) **Visiting Lecturer / Visiting Instructor in Drama & Theatre Arts / French Fine Arts / Hotel Management / Indroducing to Tour Guiding / Music (veena) / Translation Studies / Transport & Tourism**

**Qualifications**

A special degree in the relevant field/ subject with at least five years teaching /professional experience.

**Note:** Preference will be given to this who have postgraduate degree (M.Phil/ Ph.D) in relevant field/subject along with required experience.

(ii) **Visiting Instructor in English Language Teaching**

**Qualifications**

A special degree in relevant field/ subject

| Post | Salary scale |
|---|---|
| Visiting Lecturer | Rs.1,500/- per hour for lecture<br>Rs.600/- per hour for tutorial/ practical |
| Visiting Instructor in English Language Teaching | Rs.750/- per hour |
| Visiting Instructor | Rs.650/- per hour |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Depty Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

REGISTRAR
2014.09.05

(C-8424)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

2014.09.04 அன்று வியாழக்கிழமை சிவபதமடைந்த அமரர் ஸ்ரீபதிசர்மா, கிருஷ்ணானந்த சர்மாவுக்கு (சமஸ்கிருத துறை) (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) எமது துறையினரின் கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.

சமஸ்கிருதத்துறை தலைவர்
விரிவுரையாளர் மாணவர் (7592)

## திருவணனை கனாதட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம் ஐயவருடம் (2014) கேதார கௌரி விரதம்

விரதாரம்பம்-03.10.2014 வெள்ளிக்கிழமை
விரதபூர்த்தி:- 23.10.2014 வியாழக்கிழமை

விரதகாரர்கள் தங்கள் பெயர் நட்சத்திரங்களை, பூரணை தினமாகிய 08.09.2014 திங்கட்கிழமை முதல் கோவில் திறந்து இருக்கும் நேரங்களில் பதிவு செய்து கொள்ளலாம். (7598)

**தேவஸ்தானம் து.வே. மகேந்திரன்**
**செயலாளர் 077 6699550**

## சுற்றி வளைப்பு

நுகர்வோர் சட்டத்தை மீறும் வகையில் நடத்தப்பட்டு வந்த சட்ட விரோத அழகு சிகிச்சை நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டு அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாவனைக்கு உதவாத மற்றும் தரமற்ற பொருட்களைப் பயன்படுத்தும் அழகு சிகிச்சை நிலையங்கள் தொடர்பில் கடந்த ஒரு மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## தொண்டர் தேவை

தற்கொலைச் செய்திகள் உங்களை வருத்துகின்றனவா? முன்பின் தெரியாதோருக்கும் உதவத் தயாரா? எம்முடன் ஒரு தொண்டராக இணையுங்கள். வாரத்தில் ஒரு நாள் மட்டும், நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றிப் பணியாற்ற வேண்டும். பயிற்சி வழங்கப்படும். காலை 9.00 - பி.ப. 1.00 இடையில் அழையுங்கள்:

**021 2228117**

கைகொடுக்கும் நண்பர்கள்

(சி-8422)

**CIMA**
Chartered Institute of Management Accountants
@
Wisdom
☎ 021 2220727 | 021 7200777

## Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்

சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.
கரவீணா இசை மன்றம், இல.04, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
TP:-0777031293 (7537)

# STEPS Programme

பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்விக்கான அரியவாய்ப்பு

✸ GIZ (PIP) மற்றும் British Council வளவாளர்களால் பயிற்றுவிக்கப்பட்டும் அவர்களுடன் இணைந்தும் பணியாற்றிய ஆசிரியர்களால் **இலக்கணம் மற்றும் இன்றைய தேவைக்கேற்ப தொடர்பாடலுக்கான பயிற்சி போன்றவற்றை உள்ளடக்கிய ஆங்கிலப் பயிற்சி உங்கள் அறிவு மட்டத்திலிருந்தே கற்பிக்கப்படும்.**

நவீன கற்கும் சூழலில் கவர்ச்சிகரமான கற்பித்தல் முறைகளையும் ஆளுமையை வளர்ப்பதற்கான பயிற்சிகளையும் இது கொண்டுள்ளது.

பயிற்சி காலப்பகுதியில் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியானது ஒரு மாதகாலம் - வாரநாட்களில் (120 மணித்தியாலம்) மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையுடன் நடைபெறும்.


உங்கள் பதிவுகளை10/09/2014 இற்கு முன் Steps Institute, யா/ கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்,நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உடன் மேற்கொள்ளவும்.

பதிவு நாட்கள் :- திங்கள் - வெள்ளி வரை 8.30 a.m -4.00 pm மேலதிக விபரங்களுக்கு :- 021 - 2224580
:- 021-2221395

**STEPS Programme,**
**கல்வி அமைச்சு, வ.மா,**
**யா/ கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்,**
**நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-8420)

# கண்ணீர் அஞ்சலி



ஸ்ரீபதி சர்மா
கிருஷ்ணானந்த சர்மா
(விரிவுரையாளர்
சமஸ்கிருதத்துறை
யாழ். பல்கலைக்கழகம்,
நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை
சமேத கைலாசநாதஸ்சுவாமி
ஆலயகுரு)

துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும்
நல்லூர் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும்
கொண்ட ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடை
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-8415)

இ.ச.பே.நாகரத்தினம்
E.S.P. நாகரத்தினம் சகநிறுவனம்
52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயார்
147, 149, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

# இராசி பலன்

**06.09.2014**
**ஆவணி 21, சனிக்கிழமை**
**சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு**
**துவாதசி பிற்பகல் 3.30 மணிவரை**
**உத்தராடம் முற்பகல் 10.05 மணிவரை**
**இராகுகாலம் 9.04-10.34 மணிவரை**
**சுபநேரம் 3.04-4.34 மணிவரை**
**பிரதோச விரதம், ஆவணி ஓணம் பண்டிகை**

**வளவன்**

**மீனம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு

**மேடம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், ஆரோக்கியமான நாள்

**இடபம்:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், எதிர்பாராத பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர்ச்செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் தாமதமாகலாம், பிரயாண பயமுண்டு.

**கும்பம்:** பயணத்தால் பலன் கிடைக்கும், சொந்த பந்தங்களுக்காக சில செலவுகளைச் செய்ய முற்படுவீர்கள், வேலைச்சுமை அதிகரிக்கும், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை பெறுவீர்கள்.

**கடகம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், கௌரவமான நாள்.

**மகரம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் சிறப்பினைக் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், உடல் நலம் சீராகும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், போசன சுகமுண்டு.

**தனுசு:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், உங்களின் வார்த்தைகளை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**விருச்சிகம்:** உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், பாராட்டும் புகழும் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, வெற்றிச் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கன்னி:** மாமன் மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## 30TH GENERAL CONVOCATION - 06.10.2014

The 30th General Convocation of the University of Jaffna will be held on **06th October 2014** for the conferment of Post-Graduate Degrees / Degrees and Diplomas. Those who have passed the following Examinations after **11th January 2014** are kindly requested to supplicate on or before **23rd September 2014** following the instructions.

*University of Jaffna*

1. Doctor of Philosophy
2. Master of Philosophy
3. Bachelor of Medicine and Bachelor of Surgery
4. Bachelor of Siddha Medicine and Surgery
5. Bachelor of Laws *Vavuniya Campus*
6. Bachelor of Business Management (Special)

**•Candidates who are awaiting for the results after sitting the final examinationof the following degree programmes are requested to applyfor the convocation after the release of results and award of degrees.**

1. Master of Science in Environmental Management
2. Post Graduate Diploma in Education(Jaffna/Vavuniya)
3. Bachelor of Science in Nursing
4. Bachelor of Pharmacy
5. Bachelor of Science in Medical Laboratory Science
6. Bachelor of Arts (General/ Special)
7. Bachelor of Fine Arts (Music/ Dance/ Art & Design)
8. Bachelor of Science in Agriculture
9. Bachelor of Business Administration
10. Bachelor of Science(General/Special)
11. Bachelor of Science in Computer Science Vavuniya Campus
12. Bachelor of Business Management (General)-
13. Bachelor of Business Administration (General)
14. Bachelor of Science (Applied Mathematics & Computing)-(General)
15. Bachelor of Science in Environmental Science (General/Special)
16. Bachelor of Information & Communication Technology (General)
17. Bachelor of Science in Information & Communication Technology (Special)
18. Certificate in Information & Communication Technology

## Instructions

**1.Supplication Forms**

A sample supplication form is given below. Candidates can either prepare the same in an A4 sheet or copy the same from the University of Jaffna web site www.jfn.ac.lk for supplication.

**2. Fees:**

- Supplication Fee Rs. 200.00
- Certificate Fee Rs.350.00
- Gown Fee Rs. 50.00

**Note:** Following graduands need not pay supplication fee and Gown hire fee.

i.Those who opt to get their degree **In absentia**

ii.Those who were conferred with ordinary Diplomas of one /two years

**3.Method of Payment**

Payments should be made at any branch of the Peoples' Bank in favour of the University of Jaffna, Account No **162 100160000880** of **the Peoples' Bank,** Jaffna University Branch. (Please write your Name & Student Registration No. in the Bank slip).

**Please note that the original copy of the payment receipt should be sent along with the Supplication Form whilst retaining a photocopy for candidate's record.**

**4.Gowns &Guest Tickets**

Graduands who supplicate to receive degree 'In Person' will be issued a gown and a Guest Ticket for the Convocation at the Academic Branch.

**5.Dues to the University**

Certificates will not be issued to those who fail to discharge any Liabilities or dues to the University.

**6.Submission of Supplication Forms**

Supplication Forms duly perfected with Payment Receipt should be either handed over or posted under registered cover to the following Addresses on or before **23.09.2014**

**(1) Graduands of the University of Jaffna**

Senior Assistant Registrar/ Admissions,
University of Jaffna, Jaffna.

**(2) Graduands of the Vavuniya Campus of the University of Jaffna**

Senior Assistant Registrar/ Examination,
Vavuniya Campus of the University of Jaffna, Vavuniya

**Closing date of Supplication: 23.09.2014**

Late supplication will not be entertained. For further details please contact Senior Assistant Registrar / Admissions at TelephoneNo. 021 2226714, 021 2222006.

**REGISTRAR**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 30-வது பொதுப் பட்டமளிப்பு விழா - 06.10.2014

கலாநிதி, முதுதத்துவமாணி, முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா, இளமாணி, டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 06.10.2014 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 30-வது பொதுப்பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் 11.01.2014 ஆம் திகதிக்கு பின்பு சித்தியடைந்து பட்டங்கள் பெற தகுதியுடையவர்கள் 23.09.2014 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

01.கலாநிதி
02.முதுதத்துவமாணி
03.வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி
04.சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி
05.சட்டமாணி
06.பட்டப்பின் கல்வி டிப்ளோமா (யாழ்ப்பாணம்/வவுனியா)

**வவுனியா வளாகம்**

07.வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு)

**✦ கீழ்வரும் தேர்வுகளுக்கு தோற்றியவர்கள் தேர்வு முடிவுகள் உறுதிப்படுத்தபட்ட பின்பு விண்ணப்பிக்கவும்.**

01.கலைமாணி (பொது/சிறப்பு)
02.நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)
03.விவசாய விஞ்ஞானமாணி
04.தொழில் நிர்வாகமாணி
05.விஞ்ஞானமாணி (பொது/சிறப்பு)
06.கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி
07.சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி
08.தாதியியல் விஞ்ஞானமாணி
09.மருந்தகவியல்மாணி
10.மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி

**வவுனியா வளாகம்**

11.வியாபார முகாமைத்துவமாணி (பொது)
12.தொழில் நிர்வாகமாணி(பொது)
13.விஞ்ஞானமாணி பிரயோக கணிதமும் கணிப்பிடலும்(பொது)
14.விஞ்ஞானமாணி சூழல் விஞ்ஞானம் (பொது சிறப்பு)
15.தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி (பொது)
16.தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (சிறப்பு)

**✦ அறிவுறுத்தல்கள்**

**01.வேண்டுகோள் படிவங்கள்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில தயாரித்தோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் மூலம் பிரதி செய்தோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**02.கட்டணங்கள்**

- ✔ வேண்டுகோள் கட்டணம் ரூபா. 200.00
- ✔ சான்றிதழ் கட்டணம் ரூபா. 350.00
- ✔ பட்டதாரி மேலங்கிக் கட்டணம் ரூபா. 50.00

**குறிப்பு:** பின்வருவோர் சான்றிதழ் கட்டணம் மட்டும் செலுத்தினால் போதுமானது.

- ✔ பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள்
- ✔ ஒன்று/இரண்டு வருட டிப்ளோமாதாரிகள்

**03.கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையின் கணக்கு இல. 162100160000880 இற்கு சேரக்கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தை செலுத்தவேண்டும். (வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர்பதிவு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்) பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி வேண்டுகோள் படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலதிகமான ஒரு போட்டோ பிரதியை உங்கள் தேவைக்கு வைத்துக் கொள்ளவும்.

**04.பட்டதாரிமேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச்சீட்டும்**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையில் வழங்கப்படும்.

**05.பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச்சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

**06.வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்து நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கீழ்க்காணும் முகவரிகளுக்கு 23.09.2014 க்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடது பக்க மூலையில் பட்டம் பெறும் கற்கைநெறியை குறிப்பிடவும்)

அ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்

**உதவிப்பதிவாளர்/அனுமதிகள்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

ஆ)யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தேர்வுகள்,**
**வவுனியா வளாகம்,**
**வவுனியா.**

✔ வேண்டுகோள்படிவங்கள்சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்திகதி: **23.09.2014.**


முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களுக்கு உதவிப்பதிவாளர்/அனுமதிகள்(தொலைபேசி இல. 021 222 6714/ 021 222 2006) உடன் தொடர்பு கொள்ளவும்.


**பதிவாளர்**

(சி-8427)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# மண்டைதீவு-திருவெண்காடு

# திருவருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான

# தேர்த்திருவிழா-07.09.2014

## (ஞாயிற்றுக்கிழமை)





## தேர்த்திருவிழா ஆவணித்திங்கள்
## 22 ஆம் நாள் (07.09.2014)

சங்கற்பம்- காலை 6.00 மணி
விசேட பூசை- காலை 7.45 மணி
வசந்த மண்டப பூசை- காலை 8.15 மணி
தம்பபூசை- காலை 9.00 மணி
தேரில் ஆரோகணம்- காலை 10.35 மணி
அவரோகணம்- பிற்பகல் 12.30 மணி

மண்டைதீவு திருவெண்காடு திருவருள்மிகு அம்பலவாணர் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவ திருவிழாவில் 06.09.2014 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் இரவு சப்பறத் திருவிழாவும் நடைபெற திருவருள் கூடியுள்ளது. 08.09.2014 திங்கட்கிழமை காலை 8.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி காலை 10.35 மணிக்கு திருவெண்காட்டு தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடுவதற்கு எம்பெருமான் திருவருள் கூடியுள்ளார். அதனைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி இரவு 9.00 மணிக்கு கொடியிறக்கமும் நிகழவுள்ளது. எனவே புலம்பெயர்ந்திருக்கும் எம்பெருமானின் பக்த கோடிகளும் அடியார்களும் வருகை தந்து விநாயகரின் இஷ்ட சித்திகளை பெற்றுக் கொள்ளுமாறு எம்பெருமானின் திருவருட்துணை கொண்டு அன்புடன் அழைக்கின்றோம்.

**விசேட தவில் நாதஸ்வரக் கச்சேரியும் அன்னதானமும் (மகேஸ்வர பூசை) நடைபெறும்.**
**திருவெண்காடுறைவோனின் இரதோற்சவம் காண வாரீர்... வாரீர்....**
**அவனது திருவருளைப் பெற வாரீர்... வாரீர்...**

திருவெண்காடு மண்டைதீவு
TP:- 021 321 3937
web add:- www.thiruvenkadumandaitivu.com

(சி-8415)

பொ.வி.திருநாவுக்கரசு
இரத்தினசபாபதி யோகநாதன் (இந்திரன்)
ஆலய தர்மகர்த்தாக்கள் மற்றும்
மஹோற்சவ உபயகாரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கடற்களப்பில் பாசி செய்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் கடற்களப்பில் கடற்பாசி செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஹேலீஸ் கூட்டு நிறுவனங்களின் வேளாண் வணிக அங்கமான ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனம் அண்மையில் மன்னார்க் கடற்களப்பில் கடற்பாசி வளர்ப்பை தொடங்கியுள்ளது.

இலங்கையின் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தொழில் வாய்ப்புக்களை ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனம் வழங்கி வருகிறது.

அந்த வகையில் இலங்கையின் வடமேற்கு கரையோரத்தில் தொடங்கியுள்ள இச் செயற்றிட்டத்தினால் மீனவக்குடும்பங்களுக்கு நன்மை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் உலகளவில் கடற்பாசியில் இருந்து உற்பத்தியாகும் உணவுப் பொருட்களுக்கு விலைமதிப்பு ஏறுமுகமாகவேயுள்ளது.

இச் செயற்றிட்டத்தின் மூலம் வடமேற்கு கரையோரத்தில் உள்ள மீனவ குடும்பங்களின் வாழ்க்கை தரம் உயர்வதோடு பூநகரியில் வலைப்பாடு குறிப்பிட்ட வகைக் கடற்பாசியை இயற்கையாக வளர்த்து அறுவடை செய்வதால் வடமேற்கு கரையோரத்தில் உள்ள மீனவ குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

இச் செயற்றிட்டத்தில் இணையும் மீனவர்களுக்கு பாசி விதைகள், வளர்ப்பு மிதவைகள், உலர்த்தல் தட்டுகள் ஆகியன கிடைக்கும். வளர்ப்பு, அறுவடை, உலர்த்தல் ஆகியவற்றில் முழுமையான பயிற்சியும் கிடைக்கவுள்ளது.

பூநகரியில் வலைப்பாடு, நாச்சிக்குடா ஆகிய பிரதேசங்களிலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மீனவ குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. இதன்மூலம் மேலதிக வருவாயை ஈட்டிக்குடும்ப வருவாயைப் பெருக்குவர்.

இயற்கையாகக் கடற்பாசியை வளர்த்து அறுவடை செய்து வெயிலில் உலர்த்தலாம்.

அவற்றுக்கு ஏற்ற பொருத்தமான காலநிலை மன்னார்க் கடற்களப்பில் காணப்படுகிறது. எனவே மன்னார்க் கடற்களப்பு மீனவர் வளம் பெருக்குவர்.

கடற்பாசியில் இருந்து Carrageenan (கூழிறுக்கி) பிரித்தெடுக்கலாம். இளகிய கூழை இறுக்கும் பண்பு கடற்பாசி தரும் Carrageenan இற்கு (கூழிறுக்கி) உண்டு.

எனவே உணவு பதனிடுவோருக்குக் கடற்பாசி தரும் கூழிறுக்கி பயன்படும். இது தொடர்பாக ஹேலீஸ் கூட்டு நிறுவனங்களின் பணிப்பாளர் அவைத்தலைவர் மொஹான் பண்டிதகே கூறுகையில்,

இலங்கையின் கரையோரமெங்கும் பரந்து வாழும் கடற்றொழிலாளரின் வாழ்வாதாரங்களை உயர்த்தும் திட்டமிது. இலங்கையின் அந்நியச் செலாவணியை ஈட்டும் திட்டமிது. இலங்கையை வணிகத்தில் மேம்படுத்தும் திட்டமிது. இலங்கையின் பொருளாதாரத்தை ஏற்றும் திட்டமிது.

இதுவே ஹேலீஸ் அக்ரிக்கல்ச்சர் நிறுவனத்தின் திட்ட இலக்கு.

ஹேலீஸ் அக்ரிக்கல்ச்சர் நிறுவனத்தின் இந்தியப் பங்காளரான அக்குவா அக்ரி நிறுவனம் (Aqu Agri Private Limited) இதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது, ஏற்றுமதிச்சந்தைப்படுத்தலுக்கு வழிகாட்டுகிறது, உலர் பாசியின் தரமதிப்பை உயர்த்தவும் உதவுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார். (இ-2)

## விசமாகிய உணவு 60 பேர் பாதிப்பு

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உணவு விஷமாகியதில் 60 பேர் பாதிக்கப்பட்டு நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உணவே நேற்றுக் காலைவிஷமாகியுள்ளதாக தொழிற்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# 15 வயது சிறுமி திருமணம்; இராணுவச் சிப்பாய் கைது

கண்டி ஹத்தரலியத்தைப் பொலிஸ் பிரிவில் பாடசாலை சிறுமி ஒருவரைத் திருமணம் செய்ய முயற்சித்த இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பாடசாலை செல்லும் 15 வயது மாணவி ஒருவருக்கும் 21 வயது இராணுவ சிப்பாய ஒருவருக்குமிடையே காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளது. இதனை அடுதது இருதரப்பையும் சேர்ந்த சில பெண்கள் இணைந்து இருவருக்கு மிடையே பதிவுத்திருமணம் செய்து வைக்க விவாகப் பதிவாளர் ஒருவரிடம் சென்றுள்ளனர்.

மாணவியின் வயது பற்றி சந்தேகம் எழுந்த விவாகப் பதிவாளர் பொலிஸ நிலையம் சென்று அத்தாட்சிக் கடிதம் கொண்டு வரும்படி கூறியுள்ளார். பொலிஸ நிலையம் சென்றபோது மேற்படி சிறுமி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டமை தெரிய வந்துள்ளது. அதனையடுத்து வைத்திய பரிசோதனைக்கு சிறுமியை உட்படுத்தி நீதி மன்றில் ஆஜர் செய்ய பொலிசார் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர். இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 130 | 120 |
| தக்காளி | 20 | 40 | 50 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 35 | 50 | 40 | 60 |
| கோவா | 60 | 80 | 60 | 70 |
| கரட் | 60 | 100 | 80 | 100 |
| பூசணி | 20 | 40 | 30 | 30 |
| புடோல் | 40 | 50 | 50 | 50 |
| வாழைக்காய் | 80 | 70 | 70 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 90. | 50 | 80 | 100 |
| பயற்றங்காய் | 40 | 100 | 70 | 30 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 60 | 80 | 90 | 100 |
| முருங்கைக்காய் | 50 | 60 | 50 | 80 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 | 25 |
| தேசிக்காய் | 70 | 50 | 130 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-35 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 120 | 100 | 90 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 127


உயிருக்கு மேலானது நட்பு





ஜனுஷன் ஜெயபாலசிங்கம்




சச்சி சங்கீத்




மயூரதன் மயூரன்



தீபன் சற்குணம்




கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிரை மரக்குற்றிகளுடன் பயணித்த டிப்பர் வாகனம் பொலிஸாரிடம் சிக்கியது

## சாரதி தப்பியோட்டம்; மரக்குற்றிகள் பொலிஸார் வசம்



(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் பொலிஸாரின் இரவு நேர சுற்றுக்காவல் நடவடிக்கையின் போது பல இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகளை கடத்தி வந்த டிப்பர் வாகனம் ஒன்று பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போது சிக்கிக் கொண்டது.

டிப்பரை நிறுத்தி விட்டு சாரதி தப்பியோடிய மேற்படி சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு மாங்குளம் நகரப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மாங்குளம் பொலிஸார் அண்மைக்காலமாக குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக தமது இரவுநேர சுற்றுக்காவல் கடமைகளை அதிகரித்துள்ளனர்.

இந்நிலையில் ஏ-9 வீதியூடாக மாட்டு எருவினை ஏற்றி வந்த பாரவூர்தியொன்றும் மணல் மற்றும் கற்கள் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் ஒன்றும் அண்மையில் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையை அடுத்து காட்டு மரங்கள் அதனுள் இருந்த நிலையில் பிடிபட்டுள்ளது.


இந்நிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் மாங்குளம் நகரப்பகுதியில் சோதனைக்காக டிப்பர் வாகனத்தை பொலிஸார் நிறுத்திய போது அதிலிருந்த சாரதி வாகனத்தை நிறுத்தி விட்டு தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து வாகனத்தை பொலிஸார் சோதனையிட்ட போது கற்களுக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஆறு அடி நீளமும் ஒரு அடி அகலமும் கொண்ட 20 முதிரை மரக்குற்றிகள் காணப்பட்டன.

இதன் பெறுமதி பல இலட்சம் ரூபா என இருக்கின்ற நிலையில் மரக்குற்றிகளுடன் டிப்பர் வாகனம் மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதனையடுத்து முல்லை. மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப டுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தப்பியோடிய சாரதி இனங் காணப்பட்டுள்ள நிலையில் அவரைகைது செய்வதற்கான நடவடிக்கை யும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (2-15)

# பேருந்து நிலைய மலசலகூடங்கள் அடிப்படை வசதிகளின்றி அமைப்பு

## பயணிகள் திண்டாட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அரச, தனியார் பேருந்து நிலைய வளாகத்திலுள்ள மலசலகூடங்கள் அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுவதாக முல்லைத்தீவு பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு அருகில் இயங்கி வரும் அரச, தனியார் பேருந்து நிலையத்திற்கு இவ்வருடம் நிரந்தர காணி ஒதுக்கப்பட்ட நிலையில், நிரந்தர பேருந்து தரிப்பிடக் கட்டடம் இன்றி ஒரு தற்காலிக கட்டடத்தில் இயங்கி வருகிறது.

அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்கள் பள்ளக் காணியில் அமைக்கப்பட்டுள்ளதால் மாரிகாலத்தில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் அதனை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அதைவிட அமைக்கப்பட்டுள்ள இரு மலசல கூடங்களும் ஆண்,பெண் என்ற பெயர்ப்பலகை எதுவும் இன்றி காணப்படுகிறது.

குறித்த பேருந்து நிலையத்திற்கு நாளாந்தம் ஆயிரத்திற்கு மேற்பட்ட பயணிகள் வந்து போகின்றனர். இந்நிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றவிதத்தில் இங்கு மலசலகூடங்கள் அமைக்கப்படவில்லை. அத்துடன் ஒரு மலசலகூடத்திற்கு கதவு உடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.


கரைதுறைப்பற்று பிரதேசசபையே இத்தற்காலிக மலசலகூடங்களை அமைத்து கொடுத்துள்ளது. ஆகவே எதிர்காலங்களில் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் இல்லாதவாறு மலசலகூடங்களை அமைத்து தருமாறு முல்லை பயணிகள் கரைதுறைப்பற்று பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (2-267)

# ஒருகோடியே பத்து இலட்சம் ரூபா செலவில் எருவில் குளப் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் நட்டாங் கண்டல் கிராம சேவையாளர் பகுதியில் அமைந்துள்ள எருவில் குளம் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்டத்தின் ஊடாக ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபா நிதியுதவியில் குறித்த குளப்புனரமைப்பு வேலைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு முல்லை. மாவட்ட மீள் எழுச்சி திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் நாகமணி இரத்தினராசா தலைமையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இது தொடர் பில் தெரிய வருவதாவது,

நெட்டாங்கண்டல் கிராமத்திலுள்ள எருவில் குளமானது 30 இற்கு மேற்பட்ட விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உரிய விவசாய நடவடிக்கைகளு க்காக பயன்படுத்துகிறது.

ஆயினும் வன்னியில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக நீண்ட காலமாக குளத்தின் புனரமைப்பு பணிகள் நடைபெறவில்லை.

தற்போது இச் சமாதான சூழ்நிலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்டத்தின் ஊடாக ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபா நிதியுதவியில் புனரமைப்பு செய்யப்படுவதனால் குளத்தின் நீர் சேகரிப்பு பரப்பளவு அதிகரிக்கப்பட்டு எதிர்காலத்தில் 80 தொடக்கம் 110 ஏக்கர்கள் வரை விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப் படவுள்ளது.

அத்துடன் இக் குளத்திற்கு அண்மையிலுள்ள கிராம மக்களின் குடிநீர் கிணறுகளின் நீர் மட்டம் அதிகரிப்பதற்கும் வாய்ப்பாக அமையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வாரம் நிகழ்வில் அவ்வூர் விவசாயிகள், கிராம சேவையாளர், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் உட்பட பல பொதுமக்கள் கலந்து கொண்டனர். (2-15)





# இசைத்தட்டு வெளியீடு

இசைக்கலைஞர் நிமால் இசையமைத்த வலியின் வரிகள் எனும் காணொளி இசைத்தட்டு வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு செல்வபுரத்தில் நடைபெறவுள்ளது. காணொலியை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை வன்னி மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பெற்றுக்கொள்வார்.(2)

# நிரந்தர நியமனத்தையும் வேதனத்தையும் கோரி முல்லை.முன்பள்ளி ஆசிரியர்கள் மகஜர்

## வடமாகாண கல்வி அமைச்சரிடம் கையளித்தனர்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தமக் கான நிரந்தர நியமனத்தையும் வேதனத்தையும் வழங்குமாறு கோரி வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிற்கு மகஜர் கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த 3 ஆம் திகதி கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டம் ஆரம்பமாக விருந்த நிலையில் குறித்த மாநாட்டு மண்டபத்தின் வளாகத்தில் வைத்து வடமாகாண கல்வி அமைச்சரிடம் அம்மகஜர் கையளிக்கப்பட்டது.

அம் மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களாகிய நாம் வன்னி யுத்தத்தின் போது உறவுகள் மற்றும் இல்லிடங்களை இழந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களான எம்மில் 25 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிக் கொண்டு இருப்பவர்களே அதிகமானோராவோம்.

அத்துடன் பெண்களை தலைமை தாங்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் காணப்படுகிறோம். எம்மில் சிலர் சிவில் பாது காப்புப் பிரிவில் அவர்களின் உதவியாக 23 ஆயிரம் ரூபாவை பெறுபவர்களும் உள்ளனர்.

ஆனால் பலர் 3 ஆயிரம் ரூபா வேதனத்தைக் கூட உரிய மாதங்களில் பெறுவது இல்லை.

ஆனால் முன்பள்ளி டிப்ளோமா உட்பட முன்பள்ளி ஆசிரியர்களுக்குரிய பயிற்சிகள் அனைத்தையும் உரிய முறையில் பெற்று இருப்பதோடு இயன்றவரை பதில் ஆசிரியரின்மையால் அநேகமாக நாம் விடுப்பு எடுப்பது இல்லை. எமது வேதனம் தொடா பாக பலருடன் தொடர்பு கொண்டும் ஆவணங்களை சமர்ப்பித்தும் எமது பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

சிவில் நிர்வாகமும் முல்லைத்தீவு 591 இராணுவப் பிரிவும் எமக்கு சம்பளம் தருவதாகக் கூறி எமது ஆவணங்கள் யாவும் பெற்று ஒன்றரை வருடங்கள் பூர்த்தியாகியும் எது வித பதிலும்கிடைக்கவில்லை.

கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் அத்திவாரக்கல்வியை அறிவூட்டும் முன்பள்ளி ஆசிரியர்களாகிய எங்களது கருத்துக்களை செவிமடுக்க மறுக்கிறீர்கள்.

எனவே எமது நிலையை கருத்திற்கொண்டு எமக்கு நியமனம் வழங்குவதுடன் எமது வேதனம் தொடர்பாகவும் கவனம் எடுத்து பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இம்மகஜரின் பிரதிகள் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் வணிகக் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கும் வழங்கப் பட்டுள்ளது. (2-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

913




மீன்களின் இதயத்தில் மூன்று அறைகள் இருக்கும். மீனின் இதயம் ஒரு நிமிடத்திற்கு 40 முறை துடிக்கும். அதன் எலும்புக்குள் மஞ்ஞை இருக்காது. தோலில் ஒரு திரவம் சுரக்கும். அது மீனின் உடம்பு முழுக்க வழுவழுப்பைத் தந்து, அவற்றை நம் பிடியில் இருந்து காப்பாற்றுகிறது. கழுவுற மீனில் நழுவுற மீன் என்பது பெரும்பாலான மீன்களுக்கும் பொருந்தும்.



பச்சோந்தியை நிறமாற்றிக் கொள்வதில் கில்லாடி என்பார்கள். 2 அங்குல நீளமுள்ள கடற்குதிரை மீன், பச்சோந்தி மாதிரி உடல் நிறத்தை மாற்றிக்கொள்ளும் ஆற்றல் படைத்தது. ஆனால், நிறம் மாற அதிக நேரம் ஆகும். சிர்ரி என்கிற முடி போன்ற நீண்ட அமைப்பு, இந்தக் குதிரை மீனின் உடல் முழுக்க இருக்கும். கிட்டத்தட்ட 2 வருடங்கள் உயிர் வாழும். இதனுடைய செதில்கள் உடைந்தால் திரும்பவும் வளரும். இந்தக் கடற்குதிரை மீன்களில், பெண் மீன் முட்டையிட்டு ஆண் மீனிடம் கொடுக்கும். ஆண்மீன் தன் வயிற்றுப் பகுதியிலிருக்கும் பையில் அந்த!! முட்டைகளை வைத்து, குட்டி மீன் வளரும்வரை பார்த்துக்கொள்ளும்.


வால் மீன்களில் கத்தி வால் மீன் என்று ஒன்று உண்டு. ஆண் மீன்களுக்கு மட்டும் வால் கத்திபோல் இருக்கும். இதை எதிரிகளிடமிருந்து தப்பிக்க, ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும். மோலி மீன் என்பது கறுப்பாக இருக்கும். பெண் மீன்கள் ஆண் மீன்களை விடப்பெரியது. இவை ஃப்ளோரிடா, மெக்ஸிக்கோ வளைகுடா ஆகிய பகுதிகளில் முதலில் காணப்பட்டன.









## தொட்டிக்குள் சுற்றும் தங்கச் செல்லங்கள்!

தங்க மீன்கள் என்றால் மஞ்சள் நிறத்தில் மட்டுமே இருக்கும் என்று நினைப்பது தவறு. வேறு வண்ணங்கள் கலந்த மீன்களும் உண்டு. முதுகுப் பகுதியில் சிவப்பு, மஞ்சள், பக்கவாட்டில் மஞ்சள் வயிற்றுப் பகுதியில் பித்தளை மாதிரியான மஞ்சள் என்று பல வகையில் இருக்கும். ஆண் மீன்களின் தலைப்பகுதியில் சின்னச் சின்ன முடிச்சுக்கள் இருக்கும். செவிகள் மற்றும் மார்புப் பகுதியில் இந்த முடிச்சுக்கள் இருக்கும்.

→ → → → → → → → → → → → (முற்றும்)

09.2014
06

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1522 - பேர்டினண்ட் மகலனின் விக்டோரியா கப்பல் உயிர் தப்பிய 18 பேருடன் ஸ்பெயினை வந்தடைந்து, முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த கப்பல் என்ற பெயரைப் பெற்றது.
- 1620-வட அமெரிக்காவில் குடியேறுவதற்காக இங்கிலாந்தின் பிளைமவுத் துறையிலிருந்து யாத்திரிகர்கள் புறப்பட்டனர்.
- 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கென்டக்கியின் படுக்கா நகரைக் கைப்பற்றினர்.
- 1863-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் தென் கரோலினாவின் மொரிஸ் தீவிலிருந்து விலகினர்.
- 1873 - இலங்கையில் புதிதாக வடமத்திய மாகாணம் அமைக்கப்பட்டு, மொத்தம் இலங்கையின் மாகாணங்கள் ஏழாக அதிகரிக்கப்பட்டது. ஜே. இ. டிக்சன் அதன் முதலாவது அரச அதிபரானார்.
- 1885 - கிழக்கு ருமேலியா பல்கேரியாவுடன் இணைந்தது.
- 1930-ஆர்ஜெண்டீனாவின் அதிபர் ஹிப்போலிட்டோ இரிகோயென் இராணுவப் புரட்சியையடுத்து பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1936 - கடைசி தாஸ்மானியப் புலி தாஸ்மானியா, ஹோபார்ட்டில் இறந்தது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: தென்னாபிரிக்கா ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.
- 1946 - இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி டி. எஸ். சேனநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - கனடாவின் முதலாவது தொலைக்காட்சி நிலையம், CBFT-TV, மொன்ட்றியாலில் திறக்கப்பட்டது.
- 1951 - தினமலர் நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1965 - இந்திய-பாகிஸ்தான் போர், 1965: இந்தியா பாகிஸ்தானைத் தாக்கி, லாகூரை ஒரு மணி நேரத்தில் கைப்பற்றப் போவதாக அறிவித்தது.
- 1968 - சுவிஸ்சர்லாந்து ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1970 - ஐரோப்பாவிலிருந்து நியூயோர்க் சென்று கொண்டிருந்த இரண்டு பயணிகள் விமானங்கள் பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு ஜோர்தானுக்குக் கொண்டு செல்லப்பட்டது.
- 1991 - ரஷ்யாவின் லெனின்கிராட் நகரம் மீண்டும் சென் பீட்டர்ஸ்பேர்க் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1997 - வேல்ஸ் இளவரசி டயானாவின் உடல் அடக்கம செய்யப்பட்டது. 2.5 பில்லியன் மக்கள் தொலைக்காட்சி மூலம் இந்நிகழ்வைப் பார்த்தனர்.
- 2006 - ஐரோப்பியத் தமிழ் வானொலி, மக்கள் தொலைக்காட்சி ஆகியன ஆரம்பிக்கப்பட்டன.

### பிறப்புகள்

- 1968 - சாயிட் அன்வர், பாகிஸ்தானின் துடுப்பாளர்

### இறப்புகள்

- 1998 - அகிரா குரோசாவா, ஜப்பானியத் திரைப்படத் தயாரிப்பாளர் (பி. 1910)

அன்பு வாசகர்களே!

சிறுவர் பகுதிக்கு உங்கள் அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. உங்கள் அபிப்பிராயங்களை

ஆசிரியர், சிறுவர் பக்கம்
வலம்புரி,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




...இந்தியா இலங்கைக்குப் பயணமானது கண்டியில் நடந்த முதல் டெஸ்ட் 12 ஓவர்களே ஆன நிலையில் மழை காரணமாக ரத்தானது. கொழும்பில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்தியா 225 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சச்சின் (104) மற்றும் காம்ப்ளி (125) இருவருமே சதம் அடித்தார்கள். இந்தியா முதல் இன்னிங்ஸ் 366. இரண்டாவது இன்னிங்ஸ் 4 விக்கெட் இழப்பிற்கு 359. மொத்தம் 472 எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இலங்கை விளையாடத் தொடங்கியது. இந்தியா 235 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றியடைந்தது. கடைசி டெஸ்டும் கொழும்பிலேயே நடைபெற்றது. காம்ப்ளி இந்தப் போட்டியிலும் சதம் அடித்தான். சச்சின் 71

சச்சின்கிரிக்கெட்டிற்காகவாழ்ந்தான் என்றால்காம்ப்ளி உயிர்வாழ்வதற்காக கிரிக்கெட் விளையாடினான். சச்சினுக்கு கிரிக்கெட் ஸ்வாசம். ஆனால், காம்ப்ளிக்கோ வருவாய் ஈட்டித்தரும் தொழில். இன்னும்சொல்லப்போனால், கிரிக்கெட் தவிர உலகில் அனுபவிக்கவும் சந்தோஷப்படவும் எவ்வளவோ இருக்கின்றன என்பது காம்ப்ளியின் எண்ணம். வெளி நாடுகளுக்கு பயணிக்கும்போது விளையாட்டு முடிந்தவுடன் சச்சின் ஓய்வறைக்குத் திரும்பி அடுத்த நாள் ஆட்டத்திற்குத் தன்னை தயார்ப்படுத்திக் கொள்வான். ஆனால், காம்ப்ளியோ கேளிக்கை விடுதிகள், ஹோட்டல்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று உல்லாசமாக இருப்பான்.



ரன்கள். ஆனால், இந்திய இலங்கை அணிகளைச் சேர்ந்த பேட்ஸ்மென் அனைவரும் கணிசமான ரன்கள் எடுக்க ஆட்டம் டிராவில் முடிந்தது. இந்தியா ஏற்கனவே ஒரு டெஸ்ட் போட்டியில் வென்றிருந்ததால் தொடரைக் கைப்பற்றியது.

இந்த டெஸ்டின்போது அசாருதீன் ஃப்ளு காய்ச்சலால் அவதிப்படவே சச்சின் ஆக்டிங்கேப்டனாக நியமிக்கப்பட்டான். உலக கிரிக்கெட் வரலாற்றிலேயே மிகக் குறைந்த வயதில் கேப்டனானது இந்தியாவைச் சேர்ந்த பட்டோடிதான். ஆனால், பட்டோடி முழுநேர கேப்டனாக அறிவிக்கப்பட்டார். ஆனால், சச்சினோ ஆக்டிங் கேப்டன் என்பதால் பட்டோடியைவிட ஒரு வயது குறைவாக இருந்தும் இந்தச் சாதனை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை. ஒருவேளை சச்சின் இலங்கைப் பயணம் தொடங்குவதற்கு முன்பே கேப்டனாக அறிவிக்கப்பட்டிருந்தால் உலகிலேயே மிகக்குறைந்த வயதில் கேப்டனான சாதனையும் சச்சினைச் சென்றடைந்திருக்கும். சச்சின் விளையாடிய இரு டெஸ்ட் போட்டிகளில் எடுத்த மொத்த ரன்கள் 203. சராசரி நூற்றுக்கு மேல். காம்ப்ளியேர் விளையாடிய ஏழு போட்டிகளில் நான்கு சதங்கள் எடுத்திருந்தார். சச்சினைவிட அப்போது காம்ப்ளிதான் பிரமதமாகப் பேசப்பட்டார்.

மீண்டும் ஒருமுறை முதல் பாராவை நன்றாகப் படித்துக் கொள்ளுங்கள். இப்போது விட்ட இடத்தில் தொடருவோம். காம்ப்ளி செய்த மகத்தான சாதனைகள்- தொடர்ந்து இரு டெஸ்ட்களில் இரட்டை சதங்கள். விளையாடிய 7 டெஸ்ட்களில் 4 செஞ்சுரிகள்.

### காம்ப்ளி-உனக்கு நான் இவ்வளவு பெரிய இடைவெளி?

சச்சினை விடவும் பரபரப்பாகப் பேசப்பட்ட காம்ப்ளி திடீரென இந்திய கிரிக்கெட் உலகிலிருந்து காணாமற் போனார். காம்ப்ளி உனக்கு என்ன ஆயிற்று? ஏன் இந்த மிகப்பெரிய இடைவெளி? சச்சின் மற்றும் காம்ப்ளி இருவரையும் ஒப்பிட்டு காம்ப்ளியே சுயவிமர்சனம் செய்கிறார். நான் எனது இலக்கை அடைய மாடிப்படி வழியாக ஏறுவேன். ஆனால் சச்சினோ எலிவேட்டர் மூலம் ஏறுகிறார் என்கிறார். சச்சின், காம்ப்ளி இருவரும் சிறுவயது முதற்கொண்டே நல்ல நண்பர்கள். இன்னும் சொல்லப்போனால் ஆம்ரே, அதுல், அங்கோலா, பகதுலே ஆகியோரும் கூட சச்சினுக்கு நெருக்கம்தான். இவர்கள் அனைவருக்கும் அச்ரேகர்தான் குரு. பள்ளி விளையாட்டுக்களில் சச்சினை விட நன்றாக விளையாடியது காம்ப்ளிதான். சச்சின், காம்ப்ளி, ஆம்ரே தவிர வேறு யாரும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவில்லை. இந்த நிலையில் காம்ப்ளி மட்டும் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்ற சச்சினுக்கு இணையாகப் பரபரப்பாகப் பேசப்பட்டார் என்றால் அவரது தனிப்பட்ட திறமைதான் அதற்குக் காரணம். இருப்பினும், இந்தத் திறமையை அவரால் ஏன் தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை என்பதுதான் புரியாத புதிர். விளையாட்டிலும் அப்படி ஒன்றும் மோசம் இல்லை.

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...மற்றவர்களுக்கு உதவும் சந்தோஷத்தை நீங்கள் உண்மையிலேயே அனுபவித்திருந்தால் உங்கள் இருக்கையை பெரியவருக்கு விட்டுக்கொடுத்திருப்பீர்கள்.

தியானமே உண்மையான அனுபவம் நிகழ்வதற்கான வழி, நாம் தியானம் செய்யும்பொழுது கல்லைப் போன்று கடினமாக இருக்கும் நமது இதயம், மலர்ந்து பஞ்சுபோல் மென்மையாகவும் உணர்வுடையதாகவும் ஆகி, நாம் மற்றவர்களுக்கு உதவவேண்டிய தேவையை உணர்கிறோம்.

தற்சமயம் பேருந்தில் வயதானவர்களுக்கு நமது இருக்கையைக் கொடுப்பது நல்ல விடயம் என்பதை சில பத்திரிகைகளில் படித்தோ அல்லது பெரியவர்கள் சொல்லக் கேட்டோ இருக்கிறோம். அவ்வளவே. அதற்கு பதில் என்ன நிகழ்ந்திருக்க வேண்டும் என்றால் உதவும் மனப்பான்மை நமக்குள் மலர்ந்து நாம் உதவியிருக்க வேண்டும்.

உங்களுக்குள் தியானம் நிகழ்ந்திருந்தால் மட்டுமே நுட்பமான உணர்வு உங்கள் வாழ்வின் வழியாக இருக்கும். இல்லாவிடில் அது மேலோட்டமாகவே இருக்கும். மனதின் வழியாகப் பெற்ற போதனையை இதயத்திற்குத் தள்ள ஒரு துளையிடும் கருவி வேண்டும்- அதுவே தியானம். பிறகு நீதி, நேர்மை மற்றும் அதைப் போன்ற நமக்குக் கற்றுத் தரப்பட்ட பண்புகள் நமது வாழ்க்கையின் வழியாகிவிடும். அதைப் பின்பற்றும்பொழுது சாறு நிறைந்திருப்பதை உணருவீர்கள்.

இல்லாவிடில் இந்தப் பண்புகளெல்லாம் அனுபவ அறிவாக மாறாமல் வெறும் ஏட்டுக் கல்வியாகவே இருக்கும்.


சரி நாம் இப்பொழுது விடயத்திற்கு வருவோம்.


நீங்கள் ஏன் இந்த சக்கரங்கள் பற்றிய தியான முகாமில் கலந்து கொள்ள வேண்டும்? அதில் உங்களுக்கு என்ன இருக்கிறது? இந்த அமர்வில், இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க முயற்சி செய்கிறேன். அதற்கு நாம் முதலில் நம் மனம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதை ஆராய வேண்டும். உங்களுக்கும் உங்களுக்கும் இடையில் நிற்பது உங்கள் மனம் மட்டுமே, உங்களால் உங்கள் மனதை விட்டுவிட முடியுமானால் நீங்கள் ஞானமடைந்து விடுவீர்கள்.

மனம் எவ்வாறு வேலை செய்கிறது?

ஆன்மீகம் 09

பரமஹம்ஸ சுவாமி






இந்த படத்தைப் பாருங்கள். கண்வழியாக உள்ளே செல்லும் ஒரு தகவல் எவ்வாறு பகுத்தாராயப்படுகிறது என்பதை இப்படம் காட்டுகிறது. உண்மையில் கண்கள் வழியாக மட்டுமல்லாமல் மூக்கு, செவி, நாக்கு, தொடுதல் மற்றும் கண் ஆகிய ஐம்புலன்கள் வழியாகவும் தகவல்கள் உள்ளே செல்கிறது. ஒரு உதாரணத்திற்காக நாம் கண்ணை எடுத்துக்கொள்கிறோம். இதை உங்களுக்கு விளக்குகிறேன்.

நீங்கள் எதையாவது காணும்பொழுது முதலில் உங்கள் கண்கள் பார்க்கிறது. ஸமஸ்கிருதத்தில் சக்ஷு என்று அழைக்கப்படும் ஒரு சக்தி, கண் வழியாகப் பெறப்படும் செய்திகளை மின்துணுக்குகளாக மாற்றுகிறது. இது மின்துணுக்குக் குறிப்புப் பகுப்பு மானியைப் போன்றது. கண்வழியாக உள்ளே செல்லும் செய்தியானது. இந்த சக்ஷுவால் மின்துணுக்குத் தொகுப்பாக மாற்றப்படுகிறது. கண்களால் மட்டுமன்றி, ஏனைய ஐம்புலன்கள் வாயிலாகவும் பெறப்படும் தகவல்கள் அனைத்தும் இவ்வாறே மாற்றப்படுகின்றன. பிறகு இந்தச் செய்தித் தொகுப்பு நினைவகத்திற்குச் செல்கிறது. ஸமஸ்கிருதத்தில் இந்தப் பகுதியை சித்தம் என்று அழைக்கிறோம். நினைவகத்தில் இந்தத் தொகுப்பின் மீது இன்னும் சிறிது செயலாற்றப்படுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -15

## மனிதனுக்கும் குரங்குக்குமான முரண்பாடு: அதனை தவிர்ப்பதற்கான சூழலுக்கிணைவான தந்திரோபாயங்கள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நீண்டகாலமாக மனிதனுக்கும் குரங்குக்குமான முரண்பாடு இருக்கின்ற நிலையில் தற்போது குரங்குகளின் நடவடிக்கை எதிர்பார்த்த அளவில் அதிகரித்துள்ளமையினால் இருந்த முரண்பாடு வலுப்பெற்றிருப்பதாக அறியமுடிகின்றது. குறிப்பாக பழமரங்கள் காய்த்துக்குலுங்கும் நேரத்தில் குரங்குகளின் அட்டகாசம் தாங்க முடியவில்லையென மக்கள் கவலையோடு தெரிவிக்கின்றனர். வடபகுதியில் குறிப்பாக தென்மராட்சியிலும் கிளிநொச்சி பகுதியில் அக்கராயன் பகுதியிலும் குரங்குக் கூட்டங்களின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதுடன் அவற்றினால் பயிர்களில் மற்றும் பழமரங்களில் ஏற்படுத்தப்படும் சேதங்களும் அதிகமாகவே காண ப படுகின்றன என மக்கள் விசனப்படுகின்றனர். மாமரத்தை இலக்கு வைத்து குரங்குகள் படையெடுத்தாலும் மாமரத்திலிருந்து ஓடு மற்றும் சீற் போடப்பட்ட வீடுகளின் மேல் இவை பாயும்போது அவற்றை உடைத்து விடுவதனால் மக்கள் வெறுப்படைந்து மாமரங்களை தறிக்கின்ற நிகழ்வும் இரகசியமாக நடந்து வருகின்றது. குரங்குகளை முகாமைத்துவப்படுத்த முடியாமல் மரத்தை தறிப்பதென்பது வேதனை தருகின்ற விடயமாகும். இது இன்று நேற்று வந்த பிரச்சினையல்ல. தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக இருந்து வருகின்ற போதிலும் அவ்வப்போது குரங்குகளின் தாக்கம் அதிகரித்தும் காணப்படுவதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நிலைக்கு அடிப்படைக் காரணம் நாமாகத்தான் இருக்கின்றோம் என்பதனை மறந்து விடக் கூடாது. "குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்" என்பதனை மீட்டிப்பார்த்தால் இன்னும் எம்மவர்களில் பலர் அந்த நிலையிலேயே இருப்பதையும் அதனால் இன்னும் இப்படியான பிரச்சினைகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது என்பதனையும் அவதானிக்க வேண்டும். இந்த விசித்திரத்தில் அதற்கு நியாயம் கற்பிப்பதாக வாழ்ந்து வந்த வரலாற்றை மறக்கலாமா? எனவும் வினவுகின்றனர் இளையவர்கள் கூட்டம். அதிலும் தங்களுக்கிடையில் குரங்கு என தமது நண்பர்களை பொது இடத்தில் சத்தமிட்டு அழைப்பதையும் பெருமையாக நினைத்துக் கொள்கின்றனர்.

நடைபெற்ற போர்ச்சூழலில் குரங்குகள் வசதியாக வாழ்ந்த அவற்றிற்கு சொந்தமான வாழிடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. போரில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களின் வெடிச்சத்தத்தினாலும் அவை விழுந்து வெடித்த இடங்களாலும் குரங்குகள் கூட்டமாக, தனித்துவமாக வாழ்ந்த வாழிடங்கள் முழுவதுமாக சேதமாக்கப்பட்டதாலும் அவற்றிற்கான உணவு கிடைக்குமிடங்கள் குறிப்பாக பழமரங்கள் அழிக்கப்பட்டு அவற்றை மக்கள் குடியிருப்புக்களாக மாற்றிய காரணத்தினாலும் குரங்குக் கூட்டங்கள் அந்த பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்ட நிலையில் (எமக்கும் இது பொருந்தும்) மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நகர்ந்திருக்கின்றன. குறிப்பிட்ட இனமொன்றின் வாழிடத்தை நாம் அழித்துவிட்டு எம்மவர்கள் மீளக்குடியேறியிருப்பதால் அவை மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைக்கத் தொடங்கி விட்டன என்றே நாம் கருதலாம். இதில் பிரச்சினையை எழுப்பியவர்கள் மனிதர்களாக இருப்பதனால் நாமே இதற்கு வழியையும் கண்டுகொள்ள வேண்டும். இப்போது இவை எமக்கு பீடைகளாக மாறிவிட்டிருக்கின்றன.

விவசாய செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் எந்த உயிரினத்தையும் பீடைகளாக கருதும் நிலையில் குரங்குகளும் ஒருவகை அதீத பீடைகளாக உருவெடுத்துள்ளதனை இங்கு பதிவுசெய்ய விரும்புகின்றேன். இதற்கு தீர்வு காணும் பொறுப்பு எமக்கும் உள்ளதனால் இதுவரையிலும் சாத்தியப்படக்கூடிய எதுவித தீர்வும் எந்தப் பக்கத்திலிருந்தும் வராத நிலையில் இதுபற்றி ஆராயத் தொடங்கியிருக்கின்றோம். தேடியதில் பலவிடயங்கள் கிடைத்தன. அவற்றை உங்களுடனும் பகிர்ந்து கொள்வதோடு உங்கள் கருத்திற்கும் இங்கே இடங் கொடுக்கப்பட்டுள்ளது.

இவை ஏனைய பீடைகளைப் போல விரைந்து கட்டுப்படுத்தக் கூடியனவல்ல. வடபகுதியில் நடமாடும் இவ்வகை குரங்குகளை "ஹனுமான் குரங்குகள்" எனவும் அழைக்கப்படுகின்றன. அத்துடன் இவ்வகை இனங்கள் அழியும் நிலையிலிருக்கின்றன எனவும் அறியக்கிடைக்கின்றது. மேலும் விலங்குகளை நாம் தேவையற்ற விதத்தில் அழித்துவிட முடியாது. அதில் தான் பிரச்சினையும் சட்ட சிக்கலும் இருக்கின்றது. வடபகுதி மக்கள் ஸ்ரீஹனுமானை வணக்கத்துக்குரிய கடவுளாக வணங்கும் நிலையில் ஹனுமான் குரங்குகளை கட்டுப்படுத்துவதற்காக அவற்றின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த, கொல்ல முடியாது. அதனை யாரும் பரிந்துரைக்கவும் இடமளிக்கவும் முடியாது. இதனை இறைவனாக வணங்கும் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

கட்டுப்படுத்துவதற்கு பலவழிகளை இதில் புலமை வாய்ந்தவர்கள் எடுத்துக் கூறினாலும் குரங்குகளினால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வினையே நாம் கண்டாக வேண்டும். சூழலியலாளர்களின் கருத்துப்படி இக் குரங்குகளை கூண்டிலடைத்து வில்பத்து காட்டில் விடுவதென்பது சாத்தியமான நடவடிக்கையாக அமையாது. மாறாக அவ்வாறு செய்ய முற்படின் வில்பத்து காட்டிலிருக்கின்ற குரங்குகளுக்கும் இங்கிருந்து கொண்டு சென்று விடுபவைக்கும் முரண்பாடு ஏறபடடு இறுதியில் இங்கிருந்து செனறவை இறக்க வேண்டிய நிலையேற்படும். ஆதலினால் கூண்டிலடைத்து கொண்டு சென்று விடுவதனை ஒரு தீர்வாக கருதமுடியாது.





### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-IX

இக்குரங்குகளை கொல்வது இந்துசமய முறைமைக்கும் வன விலங்குகள் பாதுகாப்பு பிரிவின் நடைமுறை சட்டதிட்டங்களுக்கும் உகந்த செயன்முறையாக இருக்காது. அவ்வாறாயின் இவற்றை பாதுகாப்பான வாழிடத்தில் வளர விடுவதுதான் சிறந்த செயன்முறையாக இருக்கும். இதற்காக வடமாகாணத்தில் குரங்குகள் சரணாலயத்தை ஏற்படுத்த வேண்டும். வடமாகாண விவசாய அமைச்சரின் கவனத்திற்கு இதனை விட்டுவைப்பது நல்லது. குரங்குகளுக்கு வெளியிடங்களில் தீனி அல்லது உணவு கிடைக்காமல் பார்த்துக்கொள்வதும் இவற்றின் நகர்வை மட்டுப்படுத்த உதவும். சந்தைகள் மறறும் பொது இடங்களில் உளள சேதன மற்றும் உணவுக்கழிவுகளை பாதுகாப்பாக அகற்றி கூட்டுப்பசளை தயாரிக்க ஏற்பாடு செய்தால் கழிவுகளையும் சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்துவதோடு குரங்குகளின் பிரச்சினைக்கும் தீர்வு கண்டிடலாம். இங்கே கூட்டுப் பசளையென கூறப்பட்டது மண்புழு உரத்தைத்தான்.

இது ஒரு சூழலுக்கிணை வான தொழில்நுட்பமாக இருப்பதனால் குறிப்பாக பெண்களுக்கு இன்னும் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கும் ஒரு சிறந்த வருமானந்தரும் கைத தொழிற்றையாக காணலாம்.

மேலும் குரங்குகளின் எண்ணிக்கையை சரணாலயத்தில் மட்டுப்படுத்திக் கொள்ளவும் வாய்ப்புக்களுண்டு. இங்கே **சேர்ந்து வாழுதல் – Coexisting** என்பதனை மனிதன் குரங்குகள் முரண்பாட்டிற்கான வலுவான தீர்வாக முன்வைத்திருப்பது சிறப்பானதாகவும் வடமாகாணத்தினது உயிர்ப்பல்வகைமையை பேணிப்பாதுகாக்கவும் உதவும். இணைந்து வாழுதல் என்பது உயிர்ப்பல்வகைமையின் தார்ப்பரியங்களில் ஒன்று.

அதனை மிருகங்களுக்கு மட்டுமல்லாமல் மனிதர்களும் நன்றாக ஆலோசித்து நடைமுறைப்படுத்துவது பலவழிகளில் நன்மையையும் இவ்வாறான முரண்பாடுகளை களையவும் உதவும்.

யாழ். மாதகலில் கடற்றொழியாளர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாதகல் கடற்றொழில் இறங்கு துறைப்பகுயில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், அமெரிக்காவின் இலங்கைக்கான துணைத்தூதுவர் அன்றூமேன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் ஜோன்சன், வலி.மேற்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சி தலைவர் பாலகிருஸ்ணன் ,ஜசாக் நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் மற்றும் அரச திணைக்களங்களின் அதிகாரிகள் ,கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ,கடற்றொழிலாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்காதேவி தேரேறி வருகிறாள்


ஈழத்திருநாட்டில் புகழ்பூத்த சக்தி தலங்களில் ஒன்றாக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் விளங்குகின்றது. உலகம் முழுவதும் வாழுகின்ற ஈழத்தமிழர்கள் பெருமையோடு போற்றுகின்ற இத்திருக்கோவிலின் சிறப்பை அறியாதவர்கள் இல்லை. இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன்பு கதிர்காமர் என்ற தவஞானி தெல்லிப்பழை உழுகுடைப் பதியில் ஸ்தாபித்த இத்திருக்கோயில் அருள்வளம் நிறைந்தது.

சித்தர்கள், யோகிகள், மகான்கள், ஞானிகள் அருள்பெற்ற தலங்கள் அபாரசக்தியுடையவை என்பது முற்று முழுதான உண்மை.

காசியில் தவம் செய்து கையில் துர்க்காதேவி இயந்திரத்தையும் தீர்த்தக் கெண்டியையும் கொண்டு தெல்லிநகர் வருகை தந்த கதிர்காமர் காடு போல் காட்சியளித்த உழுகுடை நிலத்தில் இலுப்பை மர அடியில் இயந்திரத்தை வைத்து பூஜித்தார். அத்திருவருளே துர்க்கையம்மன் கோவிலாகியது. இலுப்பைமரங்களும் பனை மரங்களும் பாம்பு புற்றுகளும் நிறை ந்த உழுகுடை இன்று உலகம் போற்றும் துர்க்காதேவி தேவஸ்தானமாக பரிணமித்துள்ளது.

இவ்வாலயத்தினை முகாமைத்துவம் செய்த தர்மகர்த்தாக்கள் உயர்ந்த சிந்தனைகளோடு செயற்பட் டனர். கடவுள் பக்தியிலும் கல்வியிலும் உயர்ந்தோரை ஒன்று கூட்டி ஆலயத்தை கையளித்தனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபராக விளங்கி பின் வடமாகாண கல்வி அதிகாரியாக விளங்கிய ஸ்ரீமான் தியாகராசா தர்மகர்த்தா சபையினால் நிர்வாக சபைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அப்பெருமகன் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற பெரியார்களை நிர்வாக சபையில் இணைத்து ஆற்றுப்படுத்தினார். அப்பெரியாருக்கு பின் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபராக விளங்கிய து.ஜெயரட்ணம் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று சிறப்பாக வழிநடத்தினார். அதிபர் ஜெயரட்ணம் அமரத்துவம் பெற்றதும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை ஆல்ய நிர்வாக சபையின் தலைவராக நியமித்தனர். அம்மையார் அல்லும் பகலும் அயராது உழைத்து துர்க்கை அம்மன் திருக்கோவிலை உலகம் அறியும் பெருங் கோயிலாக மாற்றினார். உழுகுடைப்பதி துர்க்காபுரமாக பரிணமித்தது.



ஆலயத்தையும் சமூகப் பணிகளையும் ஒருங்கிணைத்து வையகம் போற்றக்கூடிய வகையில் கோயிலை நெறிப்படுத்தினார். 2008ஆம் ஆண்டு அம்மையார் இறைபதம் அடைந்ததும் இப்பாரிய பொறுப்பு சிறியேன் ஆகிய என்னிடம் நிர்வாக சபையினரும் தர்மகர்த்தா சபையினரும் ஒப்படைத்தனர். துர்க்காதேவியின் திருவருளாலும் பெரியவர்களின் நல்லாசியாலும் தேவஸ்தானத்தின் பணிகள் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது.

அம்பாளின் நல்லருளால் திருமஞ்சத் திருப்பணி, மகாகும்பாபிஷேகத் திருப்பணி, கைலாயவாகனத் திருப்பணி நன்முறையில் நிறைவுபெற்றது. அன்னையால் தோற்றுவிக்கப்பட்ட துர்க்காபுரம் மகளிர் இல்லம் 143 பெண் பிள்ளைகளுடன் மிகவும் சிறப்பாக இயங்குகிறது. வன்னிப்போருக்குப் பின் நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளை எமது இல்லத்தில் இணைத்துக்கொண்டோம். இடநெருக்கடி காரணமாக சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் ஆலோசனைக்கு ஏற்ப சிறுமிகளுக்கான நவீன வசதிகளைக் கொண்ட விடுதிச்சாலை கடந்த ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. இவ்வாண்டு எமது தேவஸ்தானத்திற்கு உரித்தான நல்லூர் மணிமண்டப காணியில் 3 மாடிகொண்ட விருந்தினர் மண்டபம் அமைக்கப்பட்டு அத்திருப்பணியும் அம்பாள் அருளால் பூர்த்தியாக்கப்பட்டது. சென்ற பங்குனிமாதம் தெல்லிப்பழை அமரர் பொன்னையா குடும்பம் அன்பளிப்பாக வழங்கிய நிலத்தில் மகளிர் இல்லப்பிள்ளைகளின் வாழ்வாதார நன்மைகருதி துர்க்காதேவி வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்தோம்.

முதற்கட்டமாக சகல வசதிகளும் கொண்ட 6 வீடுகள் கட்டப்பட்டு தற்போது அவை பூர்த்தியடையும் தன்மையை எட்டியுள்ளது. துர்க்காதேவியின் பக்தர்கள் உலகம் முழுவதும் வாழ்கிறார்கள். என்ன வேண்டும்? என்று தாமாகவே முன்வந்து தாராளமாக உதவுகிறார்கள். அதனால் எவ்வித தளர்வும் இன்றி தேவஸ்தான பணிகள் ஓங்கி வளர்கின்றன. சென்ற ஆனி மாதம் இந்தியா கும்பகோணத்தில் இருந்து சமயக்குரவர் நால்வரது ஐம்பொன் விக்கிரகங்கள் கொண்டு வரப்பட்டு நால்வர் திருக்கோயில் ஆலய உட்பிரகார வீதியில் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாண்டு பெருந்திருவிழாவில் 3ஆம் நாள் அம்பாளுடன் சமயக்குரவர்களும் வீதி வலம் வந்தனர். திருமுறைத்திருவிழாவாக 3ஆம் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. மேலும் எமது தேவஸ்தானத்தின் முன்னாள் செயலாளர் அமரர் தணிகாசலத்தின் நினைவாக பல இல்ட் சம் ரூபா செலவில் அன்னாரது குடும்பத் தவர்கள் திருப்பூஞ்சோலை ஒன்றை அமைத்து தந்துள்ளனர்.

அம்பா ளின் பேரருளால் தொட ர்ந்து புதிய திருப்பணிகள் நிறைவேறி வருகிறது. ஆவணிமாத திருவோணத்தை தீர்த்தமாகக் கொண்டு பன்னிரு் தினங்கள் அம்பாளின் பெருந்திரு விழா மிகவும் சிறப் பாக நடைபெறுவது வழக்கம்.

இவ்வாண்டு பெருந்திரு விழா அனைவரது ஒத்துழைப்பாலும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஆலய தர்மகர்த்தா சபை, நிர்வாக சபை, உபயகாரர்கள்,தெல்லிப் பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்கா தேவி பெண்கள் தொண்டர் சபை, துர்க்காபுரம் மகளிர் இல்ல பிள்ளைகள், தேவஸ்தான பணியாளர்கள், பக்தர்கள் அனைவரது கூட்டு முயற்சியாலும் இந்திரவிழாப் போல் துர்க்கா தேவியின் பெருந்திருவிழா சிறப்பாக நடைபெறுவது பெரும்பாக்கியம் எனலாம்.

அம்பாளின் திருத்தேர் விழா சிறப்பினைக் காண அனைவரும் வருகைதந்து நல்லருள் பெறவேண்டி பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி
ஆறு.திருமுருகன்
தலைவர்,
நிர்வாக சபை,
ஸ்ரீதுர்க்காதேவி
தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

## தெல்லிநகர் தேவி தேரேறுகிறாள்

தெல்லிநகர் உறையும்– சிவதுர்க்கையே! சுந்தரியே!
அள்ளியுந்தன் புகழ் சொரிவேன்–நாளும்
அருள்கண்ணால் பாருமம்மா!
தெல்லிநகர்...
தெல்லிநகர் வீதியுலா– தினம்தேவலோகம் காட்சி தரும்
வல்லியுந்தன் அருள்பார்வை– இங்கு
வந்தோர்கள் வினைபோக்கும்
தெல்லிநகர்...
பட்டுப் பீதாம்பரங்கள்–பசும் பூமாலை அலங்காரம் எட்டுத்திக்கும்
பாமாலை–என்றும் உன்னழகைக் கூட்டி நிற்கும்
தெல்லிநகர்...
மணியொலிக்கும் சங்கொலிக்கும் மங்கையுந்தன்
அழகொலிக்கும் தெல்லிநகர் ஊரெங்கும்–தேவி
உந்தன் புகழ் ஒலிக்கும்
தெல்லிநகர்...

**கவிஞர் சரசாலையூரான்**

## இரதமேறும் தாயே இரங்காயோ எமக்கு!

ஆதாரம் எனக்கு அன்னை துர்க்காதேவி–உன்
பாதாரம் பணிந்தேன் பயம்தனை ஓட்டுவாய்
மனமார உனை நினைத்து மலரடி தொழுகின்றேன்
மருவிடும் துயர் நீக்க மாதாவே சரணடைந்தேன்
அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்
நம்பினோர் கெடுவதில்லை என்றார் நம்பியுனைப் பணிந்தோம்
எதற்கும் அஞ்சாத மனவுறுதி எம் வாழ்வில் நிலைபெற
வீரசக்தித் தாயே விருப்புடனே வரமருள்வாய்!
அன்புருவானவளே! அடியார் தொழுதேத்தும் ஆனந்த வடிவே!
எங்கும் நிறைந்தவளே! எல்லாம் அறிந்தவளே!
நினைந்து நினைந்து உனை நெஞ்சுருக வேண்டுகிறோம்– இன்று
இரதமேறும் தாயே இரங்காயோ எமக்கு...!

**குறிஞ்சிக்கவி செ.ரவிசாந்**
**வீரமனை, குப்பிளான்**

## நல்வாழ்வளித்திடும் துர்க்காதேவி தாயே!

தெல்லியூர் பதிதனில் மேவும்
துர்க்கா தேவியே
எண்ணிய வரம் கொடுக்கும்
துர்க்கா தேவியே
எண்ணம் போல மங்கையர்க்கு நல்
மணவாழ்வு அளித்திடும்
துர்க்கா தேவியே
அகந்தைபைப் போக்கி நல் ஆற்றலைக்
கொடுக்கும் துர்க்காதேவியே
அகமிரங்கி துன்ப துயரங்களில் துவண்டு
வாழ்ந்திடும் எம்மைக் காத்திட
தேரேறி வருகிறாள் தேவி

**நயினை**
**விசு-இராசநாயகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைத் தேர்தல் முடிவுகள் பா.ஜ.கவுக்கு தோல்வியா?

லோக்சபா தேர்தலுக்குப் பின் மூன்று மாதங்கள் கழிந்த நிலையில் வெளியாகியுள்ள 4 மாநிலங்களுக்கு உள்பட்ட 18 சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் முடிவுகள், மத்தியில் ஆளும் பா.ஜ.கவுக்கு எச்சரிக்கை மணியாக உள்ளன. இத்தேர்தல் முடிவுகளில் பா.ஜ.க பெரும் தோல்வியைச் சந்திக்கவில்லை. என்றாலும், அக்கட்சி 3 மாதங்களுக்கு முன் பெற்ற மக்கள் செல்வாக்குடன் ஒப்பிடுகையில் சிறு ஏமாற்றம் ஏற்படவே செய்கிறது.

சட்டசபை உறுப்பினர் பதவியிடங்கள் காலியான பிகார் (10), பஞ்சாப் (2), ம.பி. (3), கர்நாடகா (3) ஆகிய மாநிலங்களிலுள்ள 18 தொகுதிகளில் கடந்த ஆக. 21 இல் இடைத்தேர்தல் நடைபெற்றது. அதன் முடிவுகள் ஆக. 25 இல் வெளியாகின.


இதில் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், பா.ஜ.க- அகாலிதளம்- லோக்சக்தி கூட்டணி 8 தொகுதிகளிலும், பா.ஜ.கவுக்கு எதிரான காங்கிரஸ்- ராஷ்ட்ரீய ஜனதா தளம்- ஐக்கிய ஜனதாதளம் கூட்டணி 10 தொகுதிகளிலும் வென்றுள்ளன. இதையடுத்து பிரதமர் நரேந்திர மோடியின் செல்வாக்கு குறைந்துவிட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.


ஆயினும், இத்தேர்தல் முடிவுகளை மிகச் சாதாரணமாக, ஒற்றைப்பார்வை அடிப்படையில் மதிப்பிட முடியாது. இத்தேர்தல் முடிவுகளில் கட்சிகளின் செல்வாக்கு மட்டுமின்றி, கூட்டணி பலம், மாநில ஆளும் கட்சியின் அதிகார பலம் ஆகியவையும் முக்கிய பங்கு வகித்துள்ளன. மாநிலவாரியாக இத்தேர்தல் முடிவுகளைப் பரிசீலித்தால்தான் உண்மையான நிலவரம் தெரிய வரும்.


### பிகாரில் புதிய கூட்டணி


இதில் பிகார் மாநிலத்தில் மட்டுமே 10 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற்றுள்ளது. முந்தைய தேர்தலில் (2010) இத் தொகுதிகளில் பா.ஜ.க- 6, ஐக்கிய ஜனதாதளம்- 1, ஆர்.ஜே.டி- 3 இடங்களில் வென்றிருந்தன. அப்போது பா.ஜக- ஐ.ஜ.தளம் கூட்டணி, காங்கிரஸ்- லோக்சக்தி கூட்டணியையும், ஆர்.ஜே.டி கட்சியையும் வென்று ஆட்சியைப் பிடித்தது.

லோக்சபா தேர்தலின்போது ஐ.ஜ.தளத்துடன் கூட்டணியை முறித்து லோக்சக்தியுடன் கைகோரத்த பா.ஜ.க பிகாரின் 40 தொகுதிகளில் 31 இல் வென்றது. அப்போது எதிரும் புதிருமாக இருந்த ஐக்கிய ஜனதாதளம், காங்கிரஸ், ஆர்.ஜே.டி கட்சிகள், பா.ஜ.கவின் செல்வாக்கிற்கு முட்டுக்கட்டை போடும் வகையில் அண்மையில் கூட்டணி சேர்ந்தன. கடந்த பல தேர்தல்களில் நிலவிய பகையை மறந்து, பா.ஜ.கவின் வளர்ச்சியால் அஞ்சி ஒன்று சேர்ந்த இக்கூட்டணி அதற்கான பயனை அறுவடை செய்துள்ளது.









இடைத்தேர்தலில், ஆர்.ஜே.டி- 3, காங்கிரஸ்- 2, ஐ.ஜ.தளம்-1 என இக்கூட்டணி 6 தொகுதிகளில் வென்றது. பா.ஜ.க 4 இடங்களில் வென்றது. இந்த முடிவுக்கு, பிகாரில் ஆளும் ஐக்கிய ஜனதா தளத்தின் அதிகார துஷ்பிரயோகம், பா.ஜ.கவுக்கு எதிரான கூட்டணிக் கடசிகளின் வாக்கு வலிமை ஆகியவையே காரணம். இருந்தபோதும் 4 தொகுதிகளில் வென்று இப்போதும் தனித்த செல்வாக்கில் பா.ஜ.கதான் முன்னணியில் உள்ளது. இங்கு பஸ்வானின் லோக்சக்தி கட்சி இடைத்தேர்தலில் தேறவில்லை.

### ம.பி., பஞ்சாபில் மாற்றமில்லை

பா.ஜ.க ஆளும் மத்திய பிரதேசத்தில் 3 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் சென்ற சட்டசபை தேர்தலில் (2013) காங்கிரஸ் 2 தொகுதிகளிலும் பா.ஜ.க ஒரு தொகுதியிலும் வென்றிருந்தன. இடைத் தேர்தலுக்குப் பிறகு, இம்முடிவு தலைகீழாக மாறியுள்ளது. தற்போது பா.ஜ.க- 2, காங்கிரஸ்- 1 தொகுதிகளில் வென்றுள்ளன. மாநில முதல்வர் சிவராஜ் சிங் சௌகானின் செல்வாக்கு சற்றும் குறையவில்லை என்பதை இத்தேர்தல் காட்டியுள்ளது.

பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சியான அகாலிதளம் ஆளும் பஞ்சாபில் சென்ற தேர்தலில் (2012) காங்கிரஸ் வென்ற இரு தொகுதிகளுக்கு இப்போது இடைத்தேர்தல் நடந்தது. இதில் அகாலிதளம்-1, காங்கிரஸ்- 1 தொகுதிகளில் வென்றுள்ளன. மாநிலத்தில் நிலவும் ஆளும் கட்சிக்கு எதிரான மனநிலையையும் மீறி ஒரு தொகுதியில் அகாலிதளம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கர்நாடகாவில் சரிவு



காங்கிரஸ் ஆளும் கர்நாடகாவில் 3 தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தலில் காங்கிரஸ்- 2, பா.ஜ.க- 1 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளன. இதில் முந்தைய தேர்தலில் காங்கிரஸ்- 1, பா.ஜ.க- 1, பிஎஸ்ஆர்.காங்கிரஸ்- 1 கட்சிகள் வென்றிருந்தன. இவற்றில் பிஎஸ்ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஸ்ரீராமுலு கட்சியைக் கலைத்து விட்டு பா.ஜ.கவுடன் ஐக்கியமானதால் அவர் பெல்லாரி லோக்சபா தொகுதியில் வென்றார். அவர் முன்னர் வென்ற சட்டசபை தொகுதியான பெல்லாரி சட்டசபை தொகுதியில் இப்போது காங்கிரஸ் வென்று விட்டது. இதுதான் உண்மையில் பா.ஜ.கவுக்கு பெரும் பாதிப்பாகும்.

எனினும் எடியூரப்பா வென்ற ஷிகாரிபுரா சட்டசபை தொகுதியில் அவரது மகன் ராகவேந்திரா வென்றிருக்கிறார். மற்றொரு தொகுதி ஏற்கனவே காங்கிரஸ் வசம் இருந்தது, அக்கட்சிக்கே சென்றுள்ளது. பா.ஜ.கவின் உள்கட்சிப் பூசலால் காங்கிரஸ் வசம் சென்ற நிலையிலேயே தற்போதும் இம்மாநிலம் உள்ளது.

### ஒட்டுமொத்த மதிப்பீடு

இந்த இடைத்தேர்தலுக்கு முன்னதாக நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் கட்சிகள் வென்ற தொகுதிகளின் நிலவரத்தை ஒட்டுமொத்தமாக ஆய்வு செய்தால், மிகச் சரியான மதிப்பீடு கிடைக்கும்.

முந்தைய தேர்தலில் பா.ஜ.க- 7, லோக்சக்தி- 1, அகாலிதளம்- 0, பிஎஸ்ஆர். காங்கிரஸ்-1 என 9 தொகுதிகளில் பா.ஜ.க மற்றும் கூட்டணிக் கட்சிகள் வென்றிருந்தன. மாறாக, காங்கிரஸ்- 5, ஆர்.ஜே.டி-3, ஐ.ஜ.தளம்- 1 என 9 தொகுதிகளில் காங்கிரஸின் இப்போதைய கூட்டணிக் கட்சிகள் வென்றிருந்தன.

இடைத்தேர்தலுக்குப் பிறகு இதில் காங்கிரஸ் கூட்டணிக் கட்சிகள் 10 தொகுதிகளிலும் (காங்கிரஸ்- 5, ஆர்.ஜே.டி-3, ஐ.ஜ.தளம்- 2) பா.ஜ.க கூட்டணிக் கட்சிகள் 8 தொகுதிகளிலும் (பா.ஜ.க- 7, அகாலிதளம்- 1) வென்றுள்ளன. ஒட்டுமொத்தத்தில் பா.ஜ.கவுக்கு ஓரிடம் இழப்பு. ஆயினும், தனிப்பட்ட வகையில் இப்போதும் பா.ஜ.கவே முன்னிலை வகிக்கிறது.

ஆக, இந்த இடைத்தேர்தல் முடிவுகள் பா.ஜ.கவுக்கு பெரும தோல்வியல்ல என்பது தெளிவாகவே தெரிகிறது. ஆயினும், ஊடகங்கள் விமர்சிப்பது போலல்லாவிடிலும், பா.ஜ.கவுக்கு சிறு எச்சரிக்கையாகவே இத்தேர்தல் முடிவுகளைக் கொள்ளலாம்.

முதலாவதாக, இத்தேர்தல் சட்டசபைக்கு நடைபெற்றது. மக்கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே தெளிவான வேறுபாடுகளை உணர்ந்துள்ளனர். பெரும பாலும் மாநிலத்தில் ஆளும் கட்சியே இடைத்தேர்தலில் வெல்வது அதனால்தான். ஆனாலும்கூட, பிகார், கர்நாடகாவில் பா.ஜ.க எதிர்க்கட்சியாக இருந்தபோதும் வென்றுள்ளது.

ஆட்சி மீதான அதிருப்தியை மீறி பிகாரில் காங்கிரஸ் கூட்டணி வெல்ல அக்கட்சியின் கூட்டணிக் கணக்குகள் சரிவர நிறைவேறியதே காரணம்.

இந்தக் கூட்டணியை அடுத்து வரும் தேர்தலில் பிகாரில் பா.ஜ.க தனித்து வெல்ல வேண்டுமானால், இன்னமும் கடுமையாக உழைக்க வேண்டும் என்பது புலப்பட்டுள்ளது.......................


(தொடரும்)

-இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைகளிடம் பொறுப்பைக் கொடுக்க மக்கள் கோரிக்கை விடுகின்றனராம்

## பாதுகாப்பு செயலர் கூறுகிறார்



(கொழும்பு)

இராணுவம் உள்ளிட்ட படைகளிடம் சிவில் நிர்வாகம் சார்ந்த சில விடயங்களை ஒப்படைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுவதாகவும் ஜனாதிபதியை முன்மாதிரியாகக் கொண்டே செயற்படுகின்றேன் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற இலங்கை இளைஞர் நாடாளுமன்றின் 10 ஆம் அமர்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஓர் விடயத்தை எடுத்துக் கொண்டால் அதில் முடிவு காணும் வரையில் ஓய மாட்டார்.

எந்த அழுத்தங்களுக்கும் அடிபணியாது தைரியமாக எடுத்த அரசியல் தீர்மானங்களினால் போர் வெற்றி கொள்ளப்பட்டது.

இளைஞர் ஓர் கனவை உருவாக்கி அதன் பின் செல்லும் தன்மையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இராணுவத்தில் நான் மிகவும் மரியாதை செய்யும் தலைவர் ஜெனரல் விஜய விமலரட்னவாகும். சாதாரண படைவீரர்களைக் கொண்டு எவ்வாறு சவால்களை வெற்றிகொள்வது என்பதனை அவர் புரிந்து வைத்திருந்தார்.

படையினர் எந்தவொரு பணியையும் மிகவும் சிறந்த முறையில் மேற்கொள்கின்றனர். இதனால் பல பகுதிகளிலிருந்தும் இராணுவத்திடம் சில பொறுப்புக்களை ஒப்படைக்குமாறு கோரப்படுகின்றது.

எனினும், இவ்வாறு சாதாரண விடயங்களில் படையினரை ஈடுபடுத்துவது பொருத்தமாகாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ)

# பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் ஆற்றல் இராணுவத்துக்கு உள்ளது



எத்தகைய தீவிரவாதத்தையும் எதிர்கொள்ள இலங்கை இராணுவம் தயாராகவே உள்ளது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

அல்-கொய்தா தீவிரவாத அமைப்பு தெற்காசிய நாடுகளில் தமது 'ஜிகாத்'தை (புனிதப் போர்) ஆரம்பிப்பதற்காக இந்திய உபகண்டத்துக்கான பிரிவை தொடங்கியுள்ளது என அதன் தலைவர் அய்மன் அல்-ஜவாகிரி கடந்த வியாழக்கிழமை காணொலி பதிவு ஒன்றின் மூலமாக அறிவித்திருந்தார்.

அல்-கொய்தாவின் இந்தப் பிரிவு முக்கியமாக பர்மா, பங்களாதேஷ், இந்தியாவின் அஸாம், குஜராத், அகமதாபாத், காஷ்மீர் ஆகிய இடங்களை இலக்கு வைத்துள்ளது.

இந்நிலையில் இந்த விடயம் குறித்து நேற்று முன்தினம் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய, இலங்கையில் எந்தப் பயங்கரவாதமும் தலைதூக்காமல் பாதுகாக்கும் வல்லமை இராணுவத்துக்கு உள்ளது என்றும் அதேபோன்று வெளியில் இருந்துவரும் எந்த தீவிரவாத அச்சுறுத்தலையும் தடுக்கும் ஆற்றலும் உள்ளது என்றும் தெரிவித்தார். (இ)

# வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வரவிரும்பவில்லை!

## லக்ஸ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டு



வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டுக்குவர விரும்பவில்லை. இதற்கு முழுக்காரணம் இங்குள்ள சட்டம் ஒழுங்கு நிலைமையே எனவும் முதலீட்டாளர்களின் சொத்துக்களை பாதுகாக்க சுயாதீன நீதிமன்றக் கட்டமைப்பு ஒன்றின் அவசியம் எழுந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது. நீதியின் புனிதத் தன்மைக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் ஊழல் மோசடிகள் பற்றி ஆளும் கட்சியின் அமைச்சர்களே பகிரங்க விமர்சனங்களை வெளியிட ஆரம்பித்துள்ளனர்.

சிலர் அராசங்கத்தின் ஊழல் மோசடிகள் குறித்து நூல் வெளியிடுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற அமர்வுகளில் பங் கேற்பதில்லை.

ஏனெனில், பேசுவதற்கு மட்டுமே நாடாளுமன்றம் செல்ல வேண்டியுள்ளது. எந்தவொரு நாடாளுமன்றக் குழுவிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் உள்வாங்கப்படுவதில்லை.

ஆளும் கட்சிக்கு ஆதரவாளர்கள் எந்தக் குற்றம் செய்தாலும் நீதியின் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு ஐ.தே.க. எம்.பி.லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். (இ)

# கிளி.மாவட்டத்தில் அதிகமானோர் போசாக்கு இன்மையால் பாதிப்பு



சுகாதார அமைச்சின் புள்ளி விபரங்களின்படி, நாட்டின் ஏனைய மாவட்டங்களைவிட கிளிநொச்சி மாவட்டமே போசாக்கின்மையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற போரே இதற்கு காரணமென பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் தற்போது 35.9 வீதமான குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த தசாப்தத்தில் 17.3 வீதத்தில் இருந்த குழந்தைகளின் போசாக்கின்மை 21.1 வீதமாக அதிகரித்துள்ளது. இதேவேளை, 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 18.4 வீதமாக போசாக்கின்மை குறைபாடு காணப்பட்டதாக பிரதி சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் நிறைகுறைந்த பிள்ளைகளின் பிறப்பு வீதம் இலங்கையில் திருப்தியாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## நல்ல பெயர் வாங்குவது எப்படி?

''நான் நல்ல காரியம் எல்லாம் செய்திருக்கிறேன். இருந்தாலும் எனக்கு ஒரு பெரிய குறை'' என்று ஒருவர் கூறினார்.

"என்ன குறை?" என்று கேட்டார் இன்னொருவர்.

"என்னை யாருமே நல்லவன் என்று சொல்வதில்லை! அதுதான் குறை" என்றார்.

நல்ல செயல்களை செய்பவன் என்பது வேறு! நல்லவன் என்று பெயர் எடுப்பது வேறு.

நல்ல பெயர் வாங்குவது என்பது இலகுவான காரியமா? அதுசரி எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்குவது எப்படி?

இதற்கு ஒரு அனுபவசாலி சில வழிகளைக் கூறுகிறார். முதலாவது வழி மற்றவர்களை உண்மையாகவே பாராட்டிப் பழக வேண்டும்.

சிலபேர் எப்படியென்றால் ஏனையவர்கள் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தால் அவர்களைப் பாராட்டுவதற்கு பதிலாக அவர்கள் மேலே பொறாமைப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். அல்லது அவர்களிடம் பேசுவதை நிறுத்திக் கொள்கிறார்கள்.

அதனால் நமது பெயரும் கெட்டுப் போகிறது. இரண்டாவது வழி பிறர் மீது நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

உங்களுக்குப் பக்கத்தில் இருப்பவருக்கு தலைவலி. உங்களிடம் மாத்திரை இருக்கிறது. அப்படி என்றால் அதில் ஒன்றை அவருக்கு கொடுத்து உதவுவது. அந்தத் தலைவலி நீங்கள் பக்கத்தில் இருப்பதால் வந்திருக்கலாம்.

ஏனையவர்கள் ஒரு தவறு செய்து விட்டார்கள் என்றால் அதை மறைமுகமாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

"ஐயையோ! இப்படி செய்து விட்டீர்களே" என்று ஆரம்பிக்கக் கூடாது. தவறு என்பது திருத்திக் கொள்ளக் கூடியதுதான் என்பதை அவருக்கு உணர்த்தி ஊக்கம் அளிக்க வேண்டும்.

''பரவாயில்லை, இனிமேல் இதுமாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்ளவும்!'' என்று சொல்ல வேண்டும். மூன்றாவது வழி உங்களுக்கு எதிரில் இருப்பவர்களை அலட்சியப்படுத்தக் கூடாது! அவரும் முக்கியமானவர்தான் என்பதை அவரே உணர்கிற அளவுக்கு நீங்கள் நடக்கவேண்டும்.

அவருடைய ஆலோசனைகளையும் அடிக்கடி கேளுங்கள். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று கேளுங்கள்.

அவரைக் கதைப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள். நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டு இருக்க வேண்டாம். அவர் பேசுவதைப் பொறுமையாகக் கேளுங்கள். அப்போதுதான் உங்கள்மேல் அவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் வரும்.

ஒரு கடுமையான வாக்குவாதம் செய்து கொண்டு இருக்கிறீர்கள். அதுமாதிரி வாக்குவாதங்களில் இருந்து சிறந்த பலன் பெறவேண்டுமென்றால் அதில் இருந்து ஒதுங்குவ்துதான் சிறந்த வழியாகும்.

நான்காவது விடயம் என்னவொன்றால் ஏனையவர்களை மகிழ்ச்சி அடைய வைப்பதன்மூலம் நாங்களும் மகிழ்ச்சியடைவது.

சிலருக்கு அடுத்தவர்களை அதிர்ச்சியடைய வைத்து வேடிக்கைப் பார்ப்பது என்பது ஒரு தனியான சுவாரஸ்யம். அது மிகவும் பிழையான விடயம்.

நல்ல பெயர் வாங்குவது எப்படி என்பதை ஒரு வெளிநாட்டு நிபுணர் இவ்வாறு தன் கருத்து மூலம் தெரிவிக்கின்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவிதமான விசாரணைகளுக்கிடையில்

# மனித உரிமைகளும் மனிதத்திற்கெதிரான போர்க்குற்றங்களும்

இரண்டு விசாரணைகளுக்கிடையில் எனும் தலைப்பில் சண்டே லீடரில் என்.சத்தியமூர்த்தி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது. தமிழில் :- யோகர்

(நேற்றைய தொடர்ச்சி...)

...ஆனாலும் இதிலுள்ள வேறுபாடு ஒன்று என்னவென்றால் இலங்கை தொடர்ந்தும் ஓர் ஜனநாயக நாடாகவே இருப்பது போல் வடகொரியாவோ சிரியாவோ ஜனநாயக அரசுகளல்ல. ஆனாலும் இலங்கை முடுக்கிவிட்டிருந்த விசாரணை நடவடிக்கைகள் போன்ற ஆக்கபூர்வ பதில் நடவடிக்கைகள் எதிலும் இவ்விரு நாடுகளும் இறங்கியிருக்கவில்லை என்பது கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அதாவது ஆரம்பத்தில் இலங்கை நல்லிணக்கத்திற்கான பாடங்களை கற்றுக்கொள்வதற்கான ஆணைக்குழுவை (LLRC) முதலிலும் அதனைத் தொடர்ந்து காணாமற்போனோருக்கான விசாரணை போன்ற உள்ளக பொறிமுறைகளையும் செயற்படுத்த ஆரம்பித்திருந்தது.

எனவே நவிப்பிள்ளையின் சமாந்தர எடுத்துக்காட்டுக்கு இது முற்றுப் புள்ளியாகிறது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனால் அவரது பதவி நிலைமட்ட மதிப்பீடுகளின் பொருட்டு நியமிக்கப்பட்டு தாருஸ்மன் தலைமையில் நடத்தப்பட்ட ஐ.நா விசாரணைகளையுங்கூட தெளிவுபடுத்தப்பட்ட பதில்களற்ற கேள்விகளுக்குரிய அறிக்கையாகவே தொடர்ந்துமிருக்கிறது. கேள்விகளுக்கான இந்தப் பட்டியலில் தாருஸ்மன் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமுன்னரே அது வெளியானது. (Pre-Submission Look) மற்றும் அதற்கான விசாரணை நடைமுறை (Probe Methodology) போன்றவை சம்பந்தமான கேள்விகளும் அடங்கும்.

இவைகளனைத்திற்கும் பதிலாக உள்ளக விசாரணைகளின் நம்பகத்தன்மை மட்டில் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட ஐ.நா. ம.உ.ச. (UNHRC) தீர்மானங்களின் பின்னரும் முன்னெடுக்கப்படும் கூடுதல் விபர விளக்கமான அந்தப் பன்னிரண்டு நிபுணர்களைக்கொண்ட (UNHRC) விசாரணை நடைமுறையுங்கூட முன்னையவற்றின் வழித்தடத்திலேயே கிடக்கின்றது.

## குற்றமும் தண்டனையும்

குற்றவாளியை தண்டிப்பதே ஐ.நா.ம.உ.சபை விசாரணையின் நோக்கமாக இருக்குமானால் குற்றவியல் விசாரணை அமர்வுகள் சம்பந்தப்பட்ட நாட்டிற்குள்ளேயே நடத்தப்படுவதுடன் நாட்டின் சட்டவிதிகளுக்கு அமைவாக அவை மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே தண்டனை பயனுள்ளதாய் உணரவும்படும். இலங்கையில் இப்போது இடம்பெற்று வருவதாக கருதப்படும் இந்தவிதமானதொரு சர்வதேச விசாரணை ஒன்றே தீர்ப்பிற்கு முந்திய விதமான சர்வதேச நீதிமன்ற தலையீட்டை கோரும் நிலையை என்றுமில்லாதவாறு அடிக்கடி ஏற்படுத்துவதாயுள்ளது.

இப்போதேகூட 12 பேர்களைக் கொண்ட அந்த ஐ.நா.ம.உ.சபை விசாரணைக்குழு உறுப்பினர்கள் யாரென்பதை இந்த உலக மக்களோ அல்லது பயனுள்ள சாட்சிகளாக கூறப்படும் நபர்களோகூட அறிய மாட்டார்கள்.

ஐ.நா.ம.உ.சபையின் இந்தவித விசாரணையை பின்னிருந்து நகர்த்தும் பிரதான சக்திகள் நமது நாட்டிற்கு வெளியிலும் நமது உள்நாட்டிலும் அதற்கென பரிந்துரைக்கும் தாக்கமான குற்றவியல் வழிமுறைச் சட்டங்கள் போன்ற கண்டிப்பான சட்டங்களெதுவும் இல்லாததுவுங்கூட உறுதியான சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வதை சிக்கல்களுக்குள்ளாக்குகின்றது. இதன் விளைவாக மேற்கத்தேய நீதிமன்றங்களில் குற்றவாளிகளுக்கு உரித்தான குற்றமறுப்பு உரிமையைப் பயன்படுத்தி தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கான போதிய சந்தர்ப்பங்கள் இங்கு அளிக்கப்படுவதில்லை.



முன்னைய முயற்சிகளை ஒரு ஆரம்பமாக பார்ப்போமானால் அரபு வசந்தம் மற்றும் உக்ரைன் புரட்சி போன்ற ஆட்சிமாற்ற நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டது போன்ற நிலை இங்கு ஏற்படுமானால் சர்வதேச சமூகம் நாம் பாதுகாப்பதாக வாக்குப் பண்ணிய அந்த நாடுகளைச் சேர்ந்த அப்பாவி மக்களுக்கு ஏற்படும் கதி மிக மோசமானதாகவே அமையும். அதாவது இலங்கையில் ஏற்படக்கூடிய இத்தகைய நிலைமையெதுவும் தமிழ்மக்களுக்கு போர்க்குற்றச் செயல்களால் ஏற்பட்ட பாதிப்புக்களின் உண்மைத் தன்மையைக் கண்டறியும் நடவடிக்கைகளின் எதிர்விளைவாக அவர்களுக்கு ஏற்படக்கூடிய மேலதிக பாதிப்புகளுக்கு நிகரான வேறு பாதிப்புகள் இருக்க முடியாதென எதிர்பார்க்கலாம்.

நல்லிணக்கத்திற்கான உண்மைகளைக் கண்டறியும் ஜனாதிபதி விசாரணைக்குழுவின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட காணாமற்போனோருக்கான விசாரணைக்குழுவின் தலைவரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான மக்ஸ்வெல் பரணகமவின் அவதானிப்பின்படி சில சிவில் சமூக அமைப்புக்களால் இது தொடர்பாக விடுக்கப்படும் முறைப்பாடுகள் அடிப்படையற்றவைகளாகும். காணாமற்போனோர் தொகையென சிவில் சமூகத்தினரால் உரிமை பாராட்டப்படும் ஒரு இலட்சம் பேருக்கு மேற்பட்ட எண்ணிக்கையானது மன்னார் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேராக இருப்பதாக அவர் கூறுவது மன்னார் கத்தோலிக்க ஆயர் அருட்திரு.இராயப்பு யோசப்பின் கூற்றின் அடிப்படை யிலானதாக இருக்கலாம். இதே விதமானதொருஎண்ணிக்கைமுன்னருமொரு தடவை யாழ்ப்பாணத்திலும் காணாமற்போனோர் தொகையாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

மேலும் இரு விசாரணை அதிகாரிகளைக் கொண்ட குழுவை பிரதிநிதிப்படுத்தும் விதத்திலா அல் லது தனிப்பட்ட விதமாகவா இவர் பேசுகிறார் என்பது தெளிவில்லை. எப்படியும் நிர்வாகப் பொறுப்புக்களுடன் கூடிய தலைவர் என்ற ரீதியில் இவரது கூற்றானது புறந்தள்ளி விடத்தக்கதொன்றல்ல. அதாவது 375 முறைப்பாடுகள் மட்டுமே மன்னாரிலிருந்து கிடைக்கப்பெற்றதாகவும் அவற்றிலிருந்தும் ஆக 157 முறைப்பாட்டுக்காரர் மட்டுமே பரவலான விளம்பர அறிவித்தல்களின் பின்னரும் விசாரணைக்குழு முன் பிரசன்னமாகியிருந்தனர் என்ற இவரது கூற்று எளிதான ஒன்றாக இருந்து விடாது. எமது விசாரணைக்குழுக்களின் முன்னால் சிவில் சமூகம் அளித்திருந்த சாட்சியங்கள் ஐ.நா. ம.உ.ச விசாரணைகளில் தவறியிருக்கமுடியாது என்ற எமது எதிர்பார்ப்பு சரியானதா என்பது அவர்களது அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் போது அல்லது க்சியும் போதோ அல்லது உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும்போதோ தெரிந்துவிடும்.

இலங்கை இனப்போர்கள் அனைத்திலும் இருதரப்பு நிர்வாகப் பொறுப்புக்களிலும் எவர் ஆட்சியாளர்களாகயிருந்தபோதிலும் தரைப்போர் நடவடிக்கைகளில் போலவே முடிந்தவரை அனைத்துவகைப் பிரசாரப் போர்களிலுங்கூட அவர்கள் ஈடுபட்டவர்களாகவே இருந்திருக்கின்றனர் என்ற உண்மையும் இங்கு சொல்லியே ஆகவேண்டும். பயங்கரத்தையே தமது மூலமந்திரமாக ஆரம்பத்திலிருந்து கடைப்பிடித்துவந்த விடுதலைப்புலிகள் அநேகமாக இறுதிவரை அதையே தொடர்ந்தும் பயன்படுத்தியிருந்தது.

போருக்குப் பின்னருங்கூட விடுதலைப்புலிகள் ஆதரவு பிரிவினைவாத குழுக்களின் ஆற்றல் புலம்பெயர் தமிழர் விடய சம்பந்தமான புள்ளிவிபரங்களைக் கையாள்வது, சாட்சியங்களை நிர்வகிப்பது மற்றும் வெளிநாடுகளில் புலனாய்வு செயற்பாடுகளை நகர்த்துவது போன்றவற்றில் நிபுணத்துவத்துடன் செயற்பட்டவிதமானது உள்நாட்டிலும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் இலங்கை அரசினது அதேவித மந்திரோதந்திரோபாய செயற்பாடுகளின் ஆற்றலை நிகர்த்ததாகவே இருந்தது. போரின் போதான விதிமீறல்களும் குற்றச்சாட்டுக்களும் ஒருவர் மற்றவர் மேல் நம்பத்தகுந்த விதத்தில் பழிபோடும் அவர்களது ஆற்றலை வெளிப்படுத்தின.

இரு விசாரணைக் குழுக்களிலும் உள் மற்றும் வெளிச்செயற்பாடுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போதே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்க இராஜாங்க செயலர் ஜோன் கெரியை இலங்கையின் தள நிலவரத்தை ஆராய்வதற்கான விஜயமொன்றை மேற்கொள்ளும்படி அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பு பற்றிய அரசின் பத்திரிகை அறிக்கையானது அவர் இந்த அழைப்பினை ஏற்றுக்கொண்டாரா மறுத்தாரா என்பது பற்றி அப்போது மௌனமாகவே இருந்தது.

இதற்குமுன்னரும்கடைசித்தடவையாக இடம்பெற்ற நிகழ்வில் ஜோன் கெரிக்கு முன் அவரது பதவியிலிருந்த ஹிலாரி கிளின்டன் மேற்கூறிய விதமான அதே இராஜதந்திரப் பணியாக இலங்கை வருவதற்கான எழுத்துமூலஅனுமதிகோரியபோது இலங்கை ஊடகங்களின் ஒருமித்த கவனம் அதன்மீது திரும்பியிருந்த நிலையில் நட்புரீதியில் பழகுபவரான பீரிஸ் அதுமட்டில் எந்தவிதப் பிரதிபலிப்பையும் காட்டவில்லை– அலட்டிக்கொள்ளவுமில்லை. முன்னர் குஜராத் முதலமைச்சராக இருந்தவரும் தற்போது இந்திய பிரதம மந்திரியாக இருப்பவருமான நரேந்திர மோடிக்கு 2005 இல் விசா வழங்க மறுத்திருந்த புஷ் நிர்வாகத்தை செயலர் கெரி இந்தியாவுக்கான தனது விஜயத்திற்கு சற்று முன்னர் நேரடியாகவே குறை கூறியிருந்தார் என்பது மற்றுமோர் விடயமாகும். 2005 இன் போதான இந்த விசா மறுப்பு குஜராத் முஸ்லிம் எதிர்ப்புக் கலவரங்கள் இடம்பெற்று 3 வருடங்களின் பின்னரே நிகழ்ந்தது.

கடந்த வருடம் ஐ.நா.ம.உ.சபை வாக்களிப்புக்கு முன்னர் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் பயணமொன்றினை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி செயலர் லலித் வீரதுங்க அங்குள்ள சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை மேற்கொள்ளும் விசாரணையின் தளநிலவர முன்னேற்றம் மற்றும் யுத்தத்தால் சீரழித்த தமிழர் பிரதேசப் பகுதிகளில் LLRC பரிந்துரைகளின்படி மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாட்டு முன்னேற்றங்கள் பற்றியதுமான சுருக்க விளக்கங்களை அளித்திருந்தார். அவரே தொடர்ந்தும் LLRC பரிந்துரைகளின் அடிப்படையில் அரசியல் மற்றும் அபிவிருத்தி ரீதியிலான பல்வேறுபட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படியாக ஜனாதிபதியின் தீவிர செயற்குழுவிற்கு தலைமை தாங்கி பணியை முன்னெடுத்தார். முன்னர் காலத்திற்குக் காலம் குழுவினது வேலை பற்றிய அறிக்கைகள் ஒழுங்காக வந்து கொண்டிருந்த போதிலும் பின்னர் அவ்விதம் மேற்கொண்டு எதுவும் வரவில்லை. இவ்விதமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆணைக்குழுக்களில் ஒன்றையேதான் முன்னாள் நீதிபதி பரணகம தற்போது தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கிறார்.

இவற்றையும்விடநம்பகத்தன்மை விடயங்கள் மட்டிலான விசாரணை முன்னெடுப்புக்களை ஆயுதப் படைகளுங்கூட ஆரம்பித்து ஒரு நான்கு வருட இடைவெளியில் தமது சொந்த முயற்சியின் பெறுபேறுகளை வெளிக்கொணரும்படி உயர் அதிகாரத்தால் பணிக்கப்பட்டிருப்பதும் மேற்படி ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேற்கூறப்பட்ட நிபந்தனை விரைவிலேயே முடிவுக்கு வரவேண்டுமென்ற எதிர்பார்ப்பு இல்லாமல் முறைப்பாடுகளனைத்தையும் அவற்றுக்கான நியாயபூர்வமான விசாரணையும் தண்டனையும் என்ற ரீதியில் தேவைப்படும்போது விசாரணை முடிவுகளாக சரியான நேரத்தில் பெற்றுக்கொடுப்பதையே கருதுவதாயிருக்கிறது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வா சர்வதேசத்தின் முன் மண்டியிடுவதா?

## அரசே தீர்மானிக்கட்டும் என்கிறார் மங்கள எம்.பி

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடய த்தில் அரசாங்கம் உடனடித் தீர்வினை எட்டுவதா? அல்லது சர்வதேசத்திடம் மண்டியிடுவதா? என்பதை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயத்தினை முரண்பாடாக எடுத்துக்கொள்வது அரசாங்கத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவிக்கும் ஐ.தே.க. எம்.பி. மங்கள சமரவீர, கூட்டு அரசாங்கம் ஒன்று அமைவது மூவின மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் எனவும் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இந்திய விஜயம் தொடர்பில் அரசாங்கம் விமர்சித்து வருகின்ற நிலையில் அது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியிடம் வினவிய போதே ஐக்கிய தேசிய க்ட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்குமாயின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரோ, தமிழ் மக்களோ சர்வதேச தலையீடொன்றினை விரும்பியிருக்கமாட்டார்கள். உண்மையிலேயே இலங்கையில் தேசிய விடயங்களில் சர்வதேசத்தின் தலையீடு இருக்கக் கூடாது என்பதை நாமும் விரும்புகிறோம். எனினும் அரசாங்கம் தீர்வினை விரும்பவில்லை. அரசாங்கம் இணக்கப்பாட்டினை விரும்பாத சந்தர்ப்பத்தில் சிறுபான்மை மக்கள் தமக்கான தீர்வினை வேறு ஒரு வழி முறையினூடாகவே பெற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச நாடுகளை நாடுவதில் அரசாங்கம் குற்றம் சுமத்த முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கம் உடனடித் தீர்வொன்றை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. யுத்தம் நிறைவிற்கு கொண்டுவரப்பட்டு 5 ஆண்டுகள் கடந்தும் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கம் சிந்திக்காது செயற்படுவது நாட்டின் ஒற்றுமையில் பாதிப்பினை ஏற்படுத்துவதோடு சர்வதேசத்தின் தலையீட்டினையும் வலுப்படுத்தும். எனவே, இனப் பிரச்சினை விடயத்தில் உடனடியாகத் தீர்வு காண்பதா? அல்லது நாட்டில் இனப்பிரச்சினைகளை வளர்த்து சர்வதேச அழுத்த த்திற்கு முகம் கொடுத்து இறுதியில் சர்வதேசத்திடமே மண்டியிடுவதா? என்பதை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

சர்வதேச பிடியில் இருந்து அரசாங்கம் தப்ப வேண்டுமாயின் இணக்கப்பாட்டிற்கு வருவது அவசியமாகும்.

மேலும், நாட்டின் ஒற்றுமையினை நிலைநாட்ட வேண்டுமாயின் இந்த ஆட்சியினை மாற்றி அமைக்க வேண்டும். இனத்துவேசத் தினை தூண்டி நாட்டில் குழப்பத்தினை ஏற்படுத்தும் அரசாங்கத்தினை விரட்டியடித்து அனைத்து தரப்பினரையும் மக்களையும் ஒன்றிணைத்து கூட்டாட்சி முறைமையொன்றினை உருவாக்குவதன் மூலமாகவே நாட்டில் அமைதியினை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சீன ஜனாதிபதியின் பாக். பயணம் திடீரென ரத்து

சீனாவின் ஜனாதிபதி ஜி ஜின் பிங் இந்த மாத இறுதியில் அரசு முறைப் பயணமாக பாகிஸ்தான் பயணம் மேற்கொள்வதாகவிருந்தது. ஆனால் தற்போது பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் ஷெரிப் இராஜினாமா செய்ய வேண்டும்என்று எதிர்க்கட்சித் தலைவர்களான இம்ரான்கான், கனேடிய, பாகிஸ்தானிய போதகர் தாகிர் உல் காத்ரி ஆகியோர் தலைநகரில் பெரும்போராட்டங்களை நடத்தி வருகின்றனர்..

இதனால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியினால் சீன ஜனாதிபதியின் .விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் ...ன் இக்பால் தனது இணையத் தளச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தானுக்கு மிகப் பெரிய இராஜதந்திர அடியாக இருக்கும். இதற்கு இவர்கள் இருவருமே காரணம் என்றும் இவர்கள் பெரிய அவமானத்தை நாட்டுக்குத் தந்துள்ளனர் என்றும் அவர் தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் வெளியுறவு அலுவலக செய்தித் தொடர்பாளரான தஸ்னீம் அஸ்லாம் இது பற்றிய தகவல் பாகிஸ்தான் அரசுக்கு வரவில்லை என்று மறுத்துள்ளார். சீன ஜனாதிபதியின் வரவு ஒத்தி வைக்கப்படலாம் என்று பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான சர்தாஜ் அசிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் விஜயம் இரத்து செய்யப்படுவதற்கான தகவல்களை சீனத் தூதரக அதிகாரிகளும் மறுத்துள்ளனர். இஸ்லாமாபாத்தில் நிலவும் சூழ்நிலையைத் தாங்கள் நெருக்கமாகக் கண்காணித்து வருவதாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமையன்று பாகிஸ்தானில் உள்ள அரசியல் நெருக்கடியையும், சீன ஜனாதிபதியின் விஜயத்தின்போது அவருக்கு அளிக்கப்படவிருக்கும் பாதுகாப்பு குறித்தும் ஆய்வு செய்ய சீனாவிலிருந்து ஒரு ஆய்வுக் குழு பாகிஸ்தான் சென்றுள்ளது. (இ)

# இந்தியாவிற்கு அல்-கொய்தா மிரட்டல் விடுக்கவில்லையாம்

## அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி தகவல்

அல்-கொய்தா கிளை இந்தியாவுக்கு எதிரான மிரட்டல் அல்ல என அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

அல்-கொய்தா இயக்கம் இந்தியாவில் தனது கிளையை தொடங்குவதாக அறிவித்து இருப்பது பற்றி அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தி தொடர்பாளர் கெய்ட்லின் கெய்டன் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் நிருபர்களிடம் கூறுகையில், இது இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத அச்சுறுத்தல் இல்லை என்றார்.

அவர் மேலும் கூறுகையில், "அல்-கொய்தாவின் இந்த புதிய அறிவிப்பை நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இது தொடர்பான தகவல்களை கவனித்து வருகிறோம்.

இதை தீவிரவாத இயக்கங்களிடையேயான போட்டியாக கருதுகிறோம். மேலும் அமெரிக்கர்களுக்கு எதிரான அச்சுறுத்தலாகவும் கருத வாய்ப்பு இல்லை என்றார். (இ)

## பாதுகாப்பு அமைச்சருக்கு கத்தியுடன் மிரட்டல் கடிதம்

தென்கொரிய பாதுகாப்புத் துறை அமைச்சருக்கு கத்தியுடன் இணைக்கப்பட்ட மிரட்டல் கடிதம் வந்துள்ளது. இது குறித்து பொலிஸாரும் இராணுவமும் இணைந்து விசாரணை மேற்கொண்டுள்ளன.

தென்கொரிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஹான் மின்-கூ பெயருக்கு வந்த கடிதத்துடன் கத்தி இணைக்கப்பட்டு, கடிதத்தில் ஹான் மின்-கூ வுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவத்தில் வட கொரியாவுக்கு தொடர்பிருக்கிறதா என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ரஷ்யாவிற்கு போர்க்கப்பல் வழங்க பிரான்ஸ் மறுப்பு;அமெரிக்கா வரவேற்பு

உக்ரைனின் கிழக்கு பகுதியில் செயற்பட்டு வரும் ரஷ்ய சார்பு கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்ய அரசாங்கம் முழுமையான ஆதரவு வழங்கி வருகிறது.

இதனையடுத்து ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பன பொருளாதார தடை விதித்துள்ளன.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு வழங்க வேண்டிய போர்க் கப்பலை, பிரான்ஸ் நிறுத்தியுள்ளது.

ரஷ்யாவுக்கும், பிரான்சுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் படி, இந்த ஆண்டின் ஒக்டோபர் மற்றும் அடுத்த ஆண்டில், இரண்டு ஹெலிகொப்டர் தகர்ப்பு போர்க் கப்பல்களை வழங்க வேண்டியிருந்தது.

உக்ரைனின் உள் விவகாரத்தில் மூக்கை நுழைக்கும் ரஷ்யாவுக்கு, இப்போதைக்கு போர்க் கப்பல்களை அனுப்ப முடியாதென பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

பிரான்சின் இந்த முடிவை, அமெரிக்கா மற்றும் பிரித்தானிய நாடுகள் வரவேற்றுள்ளன.

பிரான்சின் இந்த நடவடிக்கைக்கு ரஷ்யா கண்டனம் வெளியிட்டுள்ளது. (இ)

## பிரிவுத்துயர் பகிர்வு



**ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா**

துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும் நல்லூர் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா (விரிவுரையாளர் சமஸ்கிருதத் துறை யாழ். பல்கலைக்கழகம்) நேற்று முன்தினம் வியாழக் கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

**வல்லிபுரம் இராமலிங்கம்**



சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராமலிங்கம்(முன்னாள் முகாமையாளர் ப.நோ.கூ. சங்கம்- சாவகச்சேரி) நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கண்ணாடிப் பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**வல்லிபுரம் கந்தையா**

முகமாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது சுவிஸ் Zug ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தையா (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு Friedentalstrasse 60, 6004 Luzern, Switzerland என்னும் முகவரியில் நடைபெறும்.

**வைத்திலிங்கம் கந்தகோட்டத்தண்ணல்**



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Bremen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கந்தகோட்டத்தண்ணல் கடந்த 3 ஆம்திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு Friedhofstraße 19,28213 Bremen, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



**பொன்னம்பலம் விஜயராஜன்**

சாவச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Northwood ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விஜயராஜன் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு Harrow Leisure Centre,Byron Hall ,Christchurch Avenue,HA3 5BD,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**திருமதி இரத்தினசபாபதி மாணிக்கம்**



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி மாணிக்கம் காலமாகி விட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வழுக்கியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி கந்தையா தங்கம்மா**

கொடிகாமம் கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கம்மா கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு பாலாவித்தாழ்வு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயலங்கா ஏற்றுமதி கம்பனியின் யாழ்ப்பாணக் கிளை இன்று திறப்பு


(யாழ்ப்பாணம்)

விஜயலங்கா ஏற்றுமதிக் கம்பனி தனது யாழ். மாவட்ட கிளையினை யாழ்.புத்தூர், பருத்தித்துறை சோமஸ்கந்தாக் கல்லூரிக்கு முன்பாக நிறுவியுள்ளது.




இந்த புதிய கிளையின் திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பேராசிரியர் கே.சிவானந்தமூர்த்தியினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கிளையின் முக்கிய பணி யாழ். மாவட்டத்தில் விளைவிக்கப்படும் விவ சாயப் பொருட்களாகிய முருங்கைக்காய், கத்தரிக்காய், கருணைக்கிழங்கு, இராச வள்ளிக் கிழங்கு போன்றவற்றை ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுக ளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நோக்கத்து டன் இக்கிளை ஆரம்பிக்கப்பட்டுள் ளது. (இ)



நன்றி:-மிரர்

# மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்தக்கோரி தற்காலிக முகாம் மக்கள் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து 24 வருடங்களாக தற்கா லிக முகாம்களில் தங்கியுள்ள தம்மை மீள் குடி யேற்றக் கோரியும், தமக்கு அடிப்படை வசதி களை ஏற்படுத்தி தரக் கோரியும் வலி. வடக்கு மக் கள் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திற்கு மகஜர் கையளித்து ள்ளனர்.

இம்மகஜரினை வலி. வடக்கு மக்கள் சார் பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், பூந்தளிர் பெண்கள் அமைப்பும் இணைந்து யாழ். மாவட்ட செயலக நிர்வாக உத்தியோ கத்தர் கி. கருணாரத்ன ஊடாக அரச அதிபரு க்கு நேற்றைய தினம் கையளித்துள்ளனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாம் கடந்த 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக வலி. வடக்கு மயிலிட்டிக் கிரா மத்தில் இருந்து இடம் பெயர்ந்து தற்காலிக முகாமில் 24 வருடங்களாக வசித்து வருகின் றோம். முகாமில் தங்கி வாழ்ந்த எமக்கு அரசி னால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வந்தது. தற்போது யுத்தம் முடிந்து 5 வருடங் களுக்கு மேலாகி விட்டது. எம்மை இன்னமும் எமது சொந்த நிலத்தில் குடியமர்த்தாமல் விட் டமை எமக்கு பெருங் கவலை அளிக்கின் றது.



அதே வேளையில் சொந்த நிலத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளது என்ற அடிப்படை யில் அரசினால் வழங்கப்பட்ட நிவாரணத் தையும் நிறுத்தி அரசாங்கம் மீள்குடியமர்த்தப் படாத எம் நிவாரணத்தினையும் மீளக்குடிய மர்த்தப்பட்டுள்ளதாக எண்ணி நிறுத்தியமை எமக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

தொழில் வாய்ப்பை இழந்த எமக்கு எவ் வித அடிப்படை வாழ்வாதாரம் இல்லாத போது அரசாங்கத்தால் வழங்கிய நிவாரணம் பெரும் உதவியாக இருந்துள்ளது. இப்போது பாரிய உணவு நெருக்கடியை எதிர் கொள்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையி லேயே எமது முகாம் வாழ்க்கை அமைந்து ள்ளது.

ஒவ்வொரு முகாம்களிலும் சுமார் 100-160 வரைக்குமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களுக்குப் போதுமான நீர் வசதியோ, மலசல கூட வசதிகளோ இல்லை. அத்துடன் முகாம்கள் அமைந்துள்ள நிலங் கள் செப்பனிடப்படாத நீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்களாகவே உள்ளன.

இதனால் மழைகாலங்களில் மழை நீர் தேங்கி நிற்பதனால் போக்குவரத்து பாதிக் கப்படுகின்ற மலசலகூடம் சீர் இன் மையால் மழை நீருடன் கலந்து தேங்கி நிற் பதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடு உண் டாகின்றது.

குறிப்பாக மழைகாலங்களில் பாரிய நோய்த் தாக்கங்களுக்கு மக்கள் உள்ளாக்கப் படுகின் றனர்.

எனவே எம்மைச் சொந்த மண்ணில் குடிய மர்த்தும் வரைக்கும் எமது வாழ்வாதாரத்துக் கான அடிப்படைத் தேவைகளை நிறை வேற் றித் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

1. வெயில் மற்றும் மழை காலத்தில் தங்கி வாழக்கூடிய வகையில் எமது குடிசைகளை திருத்தி அமைத்துத் தருக.

2. பெண்கள் மறைந்து குளிக்கக்கூடிய அமை விடங்களை அமைத்துத் தருக.

3. மலசலகூடம், நீர்வசதிகள் பற்றாக்கு றையாக உள்ள முகாம்களுக்கு மேலதிக வசதிகள் ஏற்படுத்தித் தருக.

4. இடைவிலகும் மாணவர்களுக்கு ஊக்கு விக்கும் வகையில் தகுந்த செயற்பாடுகளை யும் கற்றல் உபகரணங்களையும் வழங் குதல்.

நிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீளவும் பெற் றுத் தருதல் என அந்த மகஜரில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-4)

# இனத்தின் விடுதலைக்காக சாட்சியமளிக்க வேண்டும்

## சிவாஜிலிங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணை யகத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற விசார ணைகளுக்கு சாட்சியமளிக்கப் போவதாகத் தெரி வித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினரும் வடக்கு மாகாண சபை உறுப்பி னருமான எம்.கே.சிவாஜிலிங்கம் முடிந்தால் தடுத்துப் பார்க்கட்டும் என்றும் அரசுக்கு சவால் விடுத்துள்ளார்.

நீதியைப் பெற்றுக் கொண்டு இனத்தின் விடுதலையை நோக்கி பயணிப்பதற்கு அனைவரும் சாட்சியமளிக்க முன்வர வேண்டுமென்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தி னம் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகள் தொடர்பில் கருத்து வெளி யிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கத்தி னால் இழைக்கப்பட்ட மானிடத்திற்கு எதிரான குற்றங்கள், அநீதிகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணை யத்தினால் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவானது கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான குற்ற மீறல்கள் தொடர்பிலேயே விசார ணைகளை மேற்கொள்ளவுள்ளது.

அதேநேரம் இதன் பின்னரும் முன்ன ரும் இடம்பெற்ற சம்பவங்கள் குற்றங்கள் தொடர்பிலும் சாட்சியங்களை வழங்க முடியும்.

இருந்தும் இத்தகைய விசாரணைகள் தொடர்பில் வடக்கு, கிழக்கிலிருந்து 33 மாகாண உறுப்பினர்கள் கையொப்பமிட்டு கடிதம் அனுப்பியிருந்தோம்.

இந்நிலையில் ஐ.நா.விசாரணைக்கு முவின் விசாரணை அறிக்கையில் குறிப்பிட்ட திருத்தத்துடன் தற்போது சர்வதேச குற்ற மென்ற குற்றமும் சேர்க்கப்பட்டிருக்கின் றது.

இக் குற்றத்திற்குள்ளேயே இனப் படு கொலை என்ற குற்றம் உள்ளடங்குகின்றது. இதற்கமைய இது தொடர்பிலும் விசா ரணைகளை மேற்கொள்வதற்கு ஆயத்த மாகவே இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு மலையின் நாயனார் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.14 மணிக்கு ஆரம்பமாகி 7.34 மணி வரை இடம்பெ றவுள்ளது.

கிரியைகள் யாவும் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஜம்பு மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம் பெறவுள் ளது.

கர்மாரம்பம் நாளை ஞாயிற் றுக்கிழமையும் எண்ணெய்க் காப்பு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிவரை இடம்பெறவுள் ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயல்க.
உண்மையாய் இருக்க மட்டுமே உழைத்திடுக.
-ஹோம்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலங்கை அரசாங்கத்திற்கு கிரந்தம் முற்றிப் பௌந்திரமாக்குகிறது

கிரந்தம் முற்றிப் பௌந்திரமாக்குதல் என்பது நம் தமிழ் மொழியில் இருக்கக்கூடிய கிராமத்துப் பழமொழி.

கிரந்தம் பௌந்திரமாக்கினால் அதன்விளைவு பாரதூரமானதாக இருக்கும். இத்தகையதொரு நிலையை நோக்கி இலங்கை அரசு செல்கிறது என்பதை இவ்விடத்தில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுமதி வழங்க முடியாது என்று அறிவித்த இலங்கை அரசு இப்போது இன்னுமொரு அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளது.

அதாவது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திக்க முடியாது; அவ்வாறு சந்திப்பதாக இருந்தால் இலங்கை அரசின் அனுமதி பெற்றே சந்திக்க முடியும் என்பதாகும்.

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இவ்வாறு கூறியதில் இருந்து பல்வேறு அனுமானங்களை ...கிக்க முடியும்.

அதில் ஒன்று, இரண்டரை இலட்சம் விருப்பு வாக்குகளைப் பெற்று வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒருவர் தமிழர் என்ற அடிப்படையின் காரணமாக இந்தியப் பிரதமரை சந்திக்க முடியாது.

ஆக, இலங்கையில் சிறுபான்மை இனத்தின் தலைவர் கூட ஒரு நாட்டின் பிரதமரை சந்திப்பதாக இருந்தால் அவர் இலங்கை அரசின் அனுமதியைப் பெற வேண்டும்.

அரசு அனுமதி வழங்கவில்லையாயின் அவர் சந்திப்பை மேற்கொள்ளமுடியாது. இதில் இருந்து இலங்கை அரசு சிறுபான்மை இனத்தை எந்தளவு தூரம் தனது அதிகாரத்தின் கீழ் அடக்க முற்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

இரண்டாவது விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்தியப் பிரதமரைச் சந்தித்ததை பெரிதாக ...பொருட்படுத்தாக இலங்கை அரசு, வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன், பிரதமர் மோடியைச் சந்திக்கப் போகின்றார் என்றவுடன் அமைச்சர் ஹெகலிய நிபந்தனை விதிப்பது எதற்கானது என்ற கேள்வி ஏற்படும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனும் இந்தியப் பிரதமர் மோடியும் சந்தித்தால் அது ஈழத்தமிழர்களுக்கு சாதகமாக அமையும் என்று அரசு கருதுகிறது.

எனவே பிரதமர் மோடியுடன் வடக்கின் முதல்வர் சந்திப்பதை எப்படியாவது தடுத்தாக வேண்டும் என்ற நோக்கிலேயே இலங்கை அரசின் அனுமதியை பெறாமல் பிரதமர் மோடியை வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சந்திக்க முடியாது என அமைச்சர் ஹெகலிய அறிக்கை விடுத்துள்ளார்.

இதுதவிர பிரதமர் மோடியை வடக்கின் முதலமைச்சர் சந்திப்பதற்கு இலங்கை அரசின் அனுமதியைப் பெறவேண்டும் எனக் கூறுவதன் மூலம் வடக்கு மாகாண அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை தெரியப்படுத்துவது.

இவையாவற்றுக்கும் மேலாக, இந்தியப் பிரதமர் மோடி விரும்பினாலும் வடக்கின் முதலமைச்சரை சந்திக்க இலங்கை அரசு அனுமதிக்காது என்பதை நாசூக்காக இந்தியாவுக்குத் தெரியப்படுத்துவது.

இவ்வாறு தெரியப்படுத்துவதனூடாக வடக்கின் முதலமைச்சரை சந்திக்க விரும்பம் கொண்டுள்ளேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்த பிரதமர் மோடிக்கு ஒரு பதிலடி கொடுப்பது என்றவாறாக அமைச்சர் ஹெகலியவின் கருத்து அமைந்துள்ளது.

அறுபது நாளைக்கு எழுபது கந்தை என்றொரு பழமொழி நம் ஊர்களில் உண்டு. அறுகின்ற நாளுக்கு எழுவது அகந்தை என்ற பழமொழியே மேற்குறிப்பிட்டவாறு திரிபடைந்தது.

என்ன செய்வது! கிரந்தம் முற்றிப் பௌந்திரமாக்குவது தவிர்க்க முடியாதெனில் யார்தான் என்ன செய்ய முடியும்?

# 16 சிறுமிகளை சீரழித்து கொலை செய்த சுரீந்தர் கோலிக்கு 12 ஆம் திகதி தூக்கு

(டில்லி)

டில்லியை அடுத்த நொய்டாவில் நிதாரி என்ற இடத்தை சேர்ந்த தொழில் அதிபர் மொனிந்தர் சிங் பாந்தர் வீட்டில சுரீந்தர் கோலி என்பவன் வேலைக்காரனாக பணி புரிந்து வந்தான்.

இந்தப் பகுதியில் கடந்த 2005-2006 ஆம் ஆண்டுகளில் அடிக்கடி சிறுமிகள் காணாமற் போனார்கள். இது தொடர்பாக சுரீந்தர் கோலி மீது அந்தப் பகுதி மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து கோலி பணி புரிந்த வீட்டில் பொலிஸார் சோதனையிட்டபோது அங்கு சிறுமிகளின் மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகள் சிக்கின. தண்ணீர் தொட்டியிலும், கால்வாய்களிலும் சிறுமிகளின் உடல் உறுப்புகள் கண்டெடுக்கப்பட்டன.

சிறுமிகளை கோலியின் முத லாளி மொனிந்தர்சிங் பாந்தர் பாலியல் பலாத்காரம் செய்து இருப்பதும், பின்னர் அவர்களை கோலி பலாத்காரம் செய்து கொலை செய்து இருப்பதும் தெரியவந்தது.

மொத்தம் 16 சிறுமிகள் கொலை செய்யப்பட்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மொனிந்தர் சிங் பாந்தர், சுரீந்தர் கோலி ஆகிய 2 பேரையும் பொலிஸார் கைது செய்தனர்.

மொத்தம் 16 கொலை வழக்குகளில் 5 வழக்கின் விசாரணை நடந்து முடிந்துள்ளது. 11 வழக்குகள் நிலுவையில் உள்ளது. இந்த 5 வழக்கில் சுரீந்தர் கோலிக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

அவனது முதலாளி மொனிந்தர் சிங் பாந்தர் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். கோலியின் தூக்கு தண்டனையை அலகாபாத் உயர்நீதி மன்றமும், உச்சநீதி மன்றமும் உறுதி செய்தன. கருணை மனுவை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் நிராகரித்து விட்டார்.

இதையடுத்து சுரீந்தர் கோலியை எதிர்வரும் செப்டம்பர் 12-ம் திகதி தூக்கில் போடுமாறு காசியாபாத் கூடுதல் செசன்ஸ் நீதிபதி அதுல்குமார் குப்தா உத்தரவிட்டுள்ளார்.

காசியாபாத் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருந்த கோலி தூக்கில் போடுவதற்காக மீரட் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டான். அவனை தூக்கில் போடுவதற்கான நீதிமன்ற உத்தரவு மீரட் சிறைச்சாலையில் அத்தியட்சகர் ரிஸ்விக்கு நேற்று முன்தினம் கிடைத்தது.

சட்ட விதிகள், சிறைச்சாலை நடைமுறைகள் படி கோலிக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும். இதற்கான ஏற்பாடுகள் மீரட் சிறைச்சாலையில நடந்து வருவதாக தெரிவித்தார்.

மத்தியில் பா.ஜனதா ஆட்சிக்கு வந்ததும் தூக்கில் போடப்படும் முதலாவது கொலை கைதி சுரீந்தர்சிங் கோலி என்பது குறிப்பிடத்தக்கது.

அவனது கருணை மனுவை நிராகரிக்க ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்த உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்,

இது போன்ற கொலையாளிகளுக்கு இரக்கம் காட்டக் கூடாது என்று குறிப்பிட்டுள்ளார். (இ)

## தென்னாபிரிக்காவிற்குள் நுழைய தலாய் லாமாவுக்கு அனுமதி மறுப்பு

தென்னாபிரிக்காவில் வருடம் தோறும் இடம்பெற்று வரும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள பௌத்த மதத் துறவி தலாய் லாமாவுக்கு நுழைவு அனுமதி வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்மண்ட் டுட்டு, நெல்சன் மண்டேலா, டீ கிளர்க் மற்றும் ஆல்பர்ட் லுதுலி ஆகிய சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்கர்களின் அறக்கட்டளைகள் சார்பாக வருடம் தோறும் உலக சமாதானத்தை வலியுறுத்தி மாநாடு ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

கேப்டவுனில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள 14ஆவது ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற தலாய் லாமாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே அவருக்கு நுழைவு அனுமதி வழங்க தென்னா பிரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தலாய் லாமாவின் பிரதிநிதி நாங்ஸா சோயெ டான் கூறுகையில், சீனாவுடனான உறவில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக, தலாய் லாமாவுக்கு நுழைவு அனுமதி வழங்க தென்னாபிரிக்க அரசு மறுத்துவிட்டது என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், தலாய் லாமா தென்னாபிரிக்காவுக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டதால், இந்த மாநாட்டை ஏனைய அழைப்பாளர்கள் புறக்கணிக்க முடிவு செய்துள்ளதாக குறித்த அறக் கட்டளையின் செய்தித் தொடர்பாளர் ரோஜர் ப்ரெட்மேன்தெரிவித்துள்ளார். (இ)

## சூழல் விழிப்புணர்வு சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யா/சென்.பெனடிக்ற் றோ.க.த.க பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட சுற்றாடல் கழக செயற்பாடுகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பதக்கமும் சான்றிதழும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 16-ம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (செ)

## தாய்மொழியினை மறந்து சீன மொழியை பேசிய இளைஞன்

### கோமாவில் இருந்த போது நடந்த அதிசயம்

அவுஸ்திரேலியாவில் இளைஞர் ஒருவர் ஒருவாரமாக கோமாவில் இருந்து மீண்ட பிறகு தனது தாய்மொழியை மறந்து விட்டு சீன மொழியில் பேசுவது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த மெக்மேகன் என்ற நபர் பயங்கரமான கார் விபத்து ஏற்பட்டதால் கோமா நிலைக்கு சென்றுள்ளார். ஆங்கிலத்தை தாய் மொழியாக கொண்ட மெக்மேகன் கோமாவில் இருந்து மீண்டு எழுந்த போது அருகில் இருந்த செவிலியரை பார்த்து சீன மொழியில் பேசியுள்ளார்.

பின்னர் செவிலியரிடம் ஒரு காகிதம் மற்றும் பேனா கேட்டு வாங்கி சீன மொழியில், தனது தாய் மற்றும் தந்தை மீது மிகுந்த அன்புள்ளதாகவும், தான் உடல் நலம் தேறிவிட்டதாகவும் எழுதி காட்டியுள்ளார்.

இவரின் புது மொழி திறனை கண்டு குடும்பத்தினர் மற்றும் மருத்துவர்கள் வியந்துள்ளனர்.

மேலும் மெக்மேகனுக்கு தனது தாய் மொழியை நினைவுபடுத்த மூன்று தினங்கள் ஆகியுள்ளது. இவர் தனது பள்ளிக்கூடத்தில் சீன மொழி படித்து வந்தாலும், அதில் சரளமாக பேசக் கூடிய திறமை இல்லாதவர் என்பது குறிப்பிடதக்கது.

இந்நிலையில் இவரின் பேச்சு திறனைக்கண்டு இவருக்கு சீன தொலைக் காட்சி நிகழ்ச்சி செய்ய அழைப்பு வந்துள்ளது.

மேலும் இவர் சீனாவிற்கு சென்று தனது பட்டப்படிப்பை தொடர உள்ளார். (செ-11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



ஐந்தாவதாக வருவது விஞ்ஞான மயகோஷா. உங்கள் அறிவாற்றலை பெருக்கிக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் நம் நாடு மிகப் பின்தங்கிய நாடாகும். மேல்நாட்டவரோடு ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் மிக பின்வாங்கியிருக்கிறோம் என்பதை உணரலாம். பௌதீகம், பொறியியல் போன்ற துறைகளில் நமக்கு இருக்கும் தேர்ச்சி குறைவு. ஆசிரியர் கல்வி கற்பிக்கும் நோக்கமே Educare அதாவது உங்களுக்குள் இயல்பாக அமைந்திருக் கும் திறனை வெளிக்கொணர்வதே ஆகும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கடவுளிடம் ஒப்படைப்போம்




- நல்லவனாக வாழ்வதும், பிறருக்கு இயன்ற நன்மை செய்வதும் தான் உண்மையான சமய வாழ்வாகும்.
- கடவுளை முழுமையாக நம்புங்கள். திட்டம் எதுவும் தேவையில்லை. வாழ்க்கையை கடவுளிடம் ஒப்படைத்து விடுங்கள்.
- ஒருவரின் சுயநலமற்ற தன்மையின் அளவைப் பொறுத்தே ஆன்மீக வாழ்வில் வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது.
- உண்மையான சமத்துவம் என்பது உலகில் எப்போதும் இருந்ததில்லை. இனி இருக்கப் போவதுமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலையடி வேம்பு உதயம் வி.க உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## விநாயகபுரம் மின்னொளி சம்பியன்







ஆலையடிவேம்பு உதயம் விளையாட்டுக்கழகம் நடத்திய 20 வயதுக்குட்பட்ட 7 பேர் கொண்ட காற்பந்தாட்டப் போட்டியில் விநாயக புரம் மின்னொளி அணி சம்பியனானது.

இச்சுற்றுப்போட்டியில் 8 கழகங்கள் பங்குபற்றின. விலகல் முறையில் நடத்தப்பட்ட போட்டியின் இறுதி சுற்றுக்கு விநாயகபுரம் சுப்பர் ஸ்டார். விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக்கழகங்கள் தகுதி பெற்றன.

இதனடிப்படையில் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் 1:0 என்ற அடிப்படையில் விநாயகபுரம் மின்னொளி சம்பியனானது.

உதயம் விளையாட்டுக்கழகத்தின் தலைவலர் எம்.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட அனுசரணையாளர்கள் வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைத்தனர்.

ஆட்டநாயகனாக மின்னொளி விளையாட்டுக்கழகத்தின் வீரர் எஸ. தனு தெரிவு செய்யப்பட்டார். (கு)

# சென்.மேரிசை வீழ்த்தி சம்பியனானது பாடும்மீன்



டார்வினின் அதிரடியான கோல்களின் மூலம் சென்.மேரிஸ் அணியைத் தோற்கடித்து சம்பியனாகியது பாடும் மீன் அணி.

அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் 16 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியை நடத்தி வந்தது.

இதன் இறுதியாட்டம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. இப் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் முதல் பாதியாட்டத்தில்தலா ஒரு கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்தன. தொடர்ந்து இரண்டாவது பாதியாட்டம் நடைபெற்ற போது இரு அணிகளும் பலமாக மோதினர்.

இதன்போது சென்.மேரிஸ் அணி வீரர் நிசான் நேர் உதை மூலம் கோல் ஒன்றினைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு பாடும்மீன் அணி வீரர் டார்வின் அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டு தனது அணியை முன்னிலைப்படுத்தினார்.

இறுதியில் பாடும்மீன் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியானாகியது.

## கூடைப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் வருடாவருடம் நடத்தப்படுகின்ற அமரர்.பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியை இவ்வருடம் வடமாகாண ரீதியில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் வடமாகாண பாடசாலைகளினது கூடைப்பந்தாட்ட அணிகள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் அணியின் பெயர் விபரங்களை பதிவு செய்துகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது.

தொடர்புகளுக்கு 075 43 53 370, 077 9102 368, 021222 2184. (கு)

# ஜேர்மனி காற்பந்தாட்ட அணியின் புதிய தலைவராக ஸ்கீவன் ஸ்டீகர்



ஜேர்மனி காற்பந்து அணியின் அணித்தலைவராக இருந்த பிலிப் லாம் ஓய்வு பெற்றதை தொடர்ந்து. புதிய அணித்தலைவராக ஸ்கீவன் ஸ்டீகர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த யூலையில் பிரேசிலில் நடந்த உலகக்கிண்ண காற்பந்து தொடரில் ஜேர்மனி அணி கிண்ணம் வென்று அசத்தியது.

இதன்பின் ஜேர்மனி அணித் தலைவர் பிலிப் லாம். சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெற்றார்.

தற்போது இப்பதவிக்கு ஸ்கீவன் ஸ்டீகர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உலகக்கிண்ணம் வென்ற அணியில் இடம்பெற்றிருந்த இவர். ஆர்ஜென்டீனாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் காயமடைந்ததால் வெளியேறினார்.

இதுவரை அணிக்காக 108 போட்டியல் பங்கேற்றுள்ள இவர். 23 கோல்கள் அடித்துள்ளார். அதேபோல் கிளப் அணியில் பேயர்ன் முனிச் அணி சார்பில் விளையாடி வருகிறார். (கு)

# சாஸ்திரிக்கு சலூட் போட்ட தவான்



இயக்குனராக உள்ள ரவி சாஸ்திரி. இந்திய அணியில் மாற்றங்களை ஏற்படுத்தி தன்னம்பிக்கை அளித்தார் என ஷிகர் தவான் பாராட்டியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி 3:1 என்ற கணக்கில் தொடரை இழந்தது. இதைத் தொடர்ந்து அணியின் பயிற்சியாளர் பிளட்சர் ஓரங்கட்டப்பட்டார்.

இதனையடுத்து முன்னாள் அணித் தலைவர் ரவி சாஸ்திரி இயக்குனராக நியமிக்கப்பட்டார். ரஹானே. ரெய்னா. தவான் உள்ளிட்ட வீரர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கினார்.

இந்நிலையில் 4 ஆவது ஒரு நாள் போட்டியில் ரஹானே சதம். ஷிகர் தவான் 97 ஓட்டங்கள் எடுக்க. இந்தியா எளிதான வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இதுபற்றி ஷிகர் தவான் கூறுகையில். 4 ஆவது போட்டியில் துடுப்பாட்ட முறையில் சில மாற்றங்கள் செய்ததால் தான் சிறப்பாக செயற்பட முடிந்தது.

இதற்கு அணியின் ஒட்டுமொத்த உதவியாளர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக இயக்குநர் ரவி சாஸ்திரி அணியில் இணைந்தது முதல் ஒவ்வொருவருக்கும் அதிகபடியான தன்னம்பிக்கை ஏற்படுத்தியுள்ளார்.

இந்த நம்பிக்கை இல்லாதிருந்தால். 4 ஆவது போட்டியில் 97 ஓட்டங்கள் எடுத்திருக்க முடியாது. என்னுடன் இணைந்து ரஹானேவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் என்று கூறியுள்ளார். (கு)

# யு.எஸ் ஓபன் டெனிஸ் தொடரின் அரையிறுதியில் ஜோகோவிச்



யு.எஸ் ஓபன் கிராண்ட் ஸ்லாம் டெனிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் விளையாட. நம்பர் 1 வீரர் நோவாக் ஜோகோவிச் (செர்பியா) அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

கால் இறுதியில் இங்கிலாந்தின் ஆண்டி மர்ரேவுடன் (8 ஆவது ரேங்க்) நேற்று மோதிய ஜோகோவிச் 7:6 (7:1) என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். அடுத்த செட்டில் கடுமையாகப் போராடிய மர்ரே 7:6 (7:1) என்ற கணக்கில் வென்று பதிலடி கொடுக்க சமநிலை ஏற்பட்டது. மூன்றாவது மற்றும் நான்காவது செட்டில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் 7:6 (7:1). 6:7 (1:7), 6:2. 6:4 என்ற செட் கணக்கில் வென்று அரை இறுதிக்கு முன்னேறினார். (கு)

# அரையிறுதிக்குள் வோஸ்னியாக்கி



யு.எஸ் ஓபன் டெனிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் கரோலின் வோஸ்னியாக்கி அதிரடியாக ஆடி அரை இறுதிக்கு தகுதி பெற்றார்.

10 ஆம் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி. 13 ஆம் நிலை வீராங்கனையான இத்தாலியின் சாரா எர்ராணியை எதிர்த்து விளையாடினார்.

இத்தொடரில் புது உத்வேகத்துடன் விளையாடி வரும் அவர் கால் இறுதியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை வென்று பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளார். இந்நிலையில் சாரா எர்ராணியை சந்தித்த வோஸ்னியாக்கி தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக ஆடினார்.

முதல் செட்டை 60 என்ற செட்களில் கணக்கில் வென்றார். 2 ஆவது செட்டிலும் எர்ராணியால் தாக்கு பிடிக்க முடியவில்லை. இதிலும் வோஸ்னியாக்கி 6:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். வெறும 65 நிமிடத்தில் 6:0. 6:1 என்ற நேர் செட்களில் எர்ராணியை வீழ்த்திய வோஸ்னியாக்கி அரை இறுதிக்கு தகுதி பெற்றார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# உதைபந்தாட்டம்

கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று சனி மற்றும் நாளை ஞாயிற்றுக் கிழமைகளில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

மேற்படி சுற்றுப் போட்டித் தொடரில் 32 அணிகள் பங்குபற்றவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டனை...

டுப்பதற்காக இலங்கை வந்துள்ள போதிலும் அவர்கள் ஆலோசனைகளை மாத்திரம் வழங்குவார்கள்.

காணமற்போனோர் குறித்து விசாரித்த வேளை எமக்கும் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்தன. இதனை நாங்கள் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்தே எமது ஆணை விஸ்தரிக்கப்பட்டது. இதனடிப்படையில் எதிர்காலத்தில் விசாரணை ஆணைக்குழு யுத்தக்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும். படையினருக்கு எதிராக யுத்தக்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் அது குறித்த விசாரணையில் ஒத்துழைப்பார்கள் என நான் கருதவில்லை என்றார் அவர். (செ-11)

# கோம்பயன்மணல் மயானத்தில் மின் தகனம் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை கோம்பயன்மணல் மயானத்தில் யாழ்ப்பாண மாநகர சபையால் நிர்மாணிக்கப்பட்ட மின் தகன நிலையம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மாவின் பூதவுடல் முதலாவதாக மின்தகனம் செய்யப்பட்டது.

நேற்று மாலை 5 மணியளவில் மின்தகனம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நு)

## இழந்த பல சந்தர்ப்பங்களை...

மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. நேற்று இடம்பெற்ற மத்திய குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த அரசுக்கு முண்டுகொடுத்துக் கொண்டிருக்கும் கட்சிகளுக்கு மக்கள் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யவேண்டும். அதற்காக நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இதன்மூலம் தமிழ் மக்களின் விருப்பத்தை சர்வதேசத்துக்கு நாம் சொல்லவேண்டும். கடந்த காலங்களையே சிந்தித்துக்கொண்டிருக்காது விட்ட தவறுகளைத் திருத்தி நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். அரசுடன் விட்டுக்கொடுக்கவேண்டிய இடங்களில் விட்டுக்கொடுத்தும் விட்டுக்கொடுக்கக்கூடாத இடங்களில் விட்டுக்கொடுக்காமலும் நாம் செயற்படவேண்டும். இந்தியப் பயணம் எங்களுக்கு நல்ல திருப்பதியைத் தந்திருக்கிறது. இந்த பயணத்தின் போது இந்தியப் பிரதமர் மோடி எமக்கு ஆரோக்கியமான ஆலோசனைகளை வழங்கினார். குறிப்பாக நீங்கள் சர்வதேசத்துடன் நெருங்கிப் பழகுங்கள். அதன்மூலம் மகிந்த அரசைப் பலவீனப்படுத்த முடியும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி எமக்கு ஆலோசனை வழங்கினார். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றை எட்டுவதையே நாம் விரும்புகிறோம் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்ட இந்தியப் பிரதமர், இந்தியா அதற்கு ஆதரவாக எப்போதும் இருக்கும் என உறுதியளித்தார். எம்மைச் சந்தித்த பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பிலும் மோடி இந்த விடயத்தைக் சுட்டிக் காட்டியிருந்தார்.

இலங்கை தமிழர் பிரச்சினையில் இந்தியா நிச்சயமாக உதவும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த ஆதரவுடன் நாமும் எல்லாச் சமூகத்தினரையும், அரசியல் கட்சிகளையும், தாயகப் பிரதேசங்களையும் ஒன்றிணைத்து எதிர்காலத்துக்காகச் செயற்படுவோம் என்றார். (செ-11)

## வடக்கிற்கு...

டார் அதற்கு நான் பதிலளிக்கையில், ஆளுநரின் காலம் முடிவடைந்ததன் பின்னரும் கூட அவருக்கு மீண்டும் பதவிக் காலத்தை நீடித்துள்ளனர்.

இதன் காரணமாக எமக்கு முன்னிலும் பார்க்க பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்படுகின்றதனை அவதானிக்க முடிகின்றது.

பல விடயங்களில் ஆளுநான் தனது மூக்கை நுழைத்து சில நடவடிக்கைகளினை எடுத்து வருகின்றதனை நான் அவதானிக்கின்றேன்.

ஒரு நிர்வாகம் ஒன்று இருக்கும் போது அதனுடைய செயலாளர் எம்மோடு இணைந்து செயற்பட்டால்தான் அதனை நல்ல முறையில் கொண்டு செல்லலாம்.

அதனை விடுத்து எங்களுக்குள் வித்தியாசமான நோக்குகள் இருந்தால் எங்களால் முன்னேற முடியாது.

அந்த நிலையிலேயே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்களுக்கு சார்பான நடவடிக்கைகள் எடுக்காத பிரதம செயலாளர், அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆளுநரோடு சேர்ந்து நடவடிக்கைகள் எடுக்கும் போது எங்களுக்கு பிரச்சினைகளைத் தருகின்றது.

இது சம்பதமாக அவருக்கு எடுத்துக் கூற வேண்டிய அவசியமிருந்தது.

அண்மையில் தான் நான் கூறினேன் இனி எங்களுடைய நிர்வாகங்களிலும் வடக்கில் நடைபெறுகின்ற பல சம்பவங்களினையும் சர்வதேசத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படப்போகின்றதென்று,

அதனை நான் தற்போது செய்து கொண்டிருக்கின்றேன். எங்களுடைய நடவடிக்கைகளிற்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருந்தால் அதனை எம்மால் பொறுக்க முடியாது.

மற்றவர்களுக்கும் சொல்லி அவர்கள் மூலமாக அரசாங்கத்திற்கு சொல்ல வேண்டிய நிர்பந்தம் எம்மைச் சார்ந்துள்ளது. அந்த வகையில் சில விடயங்களினை அவருக்கு எடுத்துக் கூறினேன் என்றார் முதலமைச்சர். (செ-4)

## பூரணமற்ற...

வில்லை வட பகுதியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற பகுதிகளில் நான் மக்களைச் சந்தித்திருந்த வேளை தமக்கு வீட்டு வசதியில்லை, குடிதண்ணீர் இல்லை, தொழில் வாய்ப்பில்லை என்று மக்கள் என்னிடம் முறையிட்டனர்.

இவை குறித்து அரசு அக்கறை கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கின்.

வட பகுதிக்கான தனது மூன்றுநாள் பயணத்தை நேற்று முடித்துக் கொண்ட அவர் தனது பயணம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட பகுதிக்கு மீண்டும் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. கடந்த காலங்களிலிருந்து வட மாகாணம் விரைவாக மீண்டுகொண்டிருக்கின்றது என்பதற்கான தெளிவான சமிஞ்சைகள் அங்கு உள்ளன. அதேவேளை சில விடயங்களில் கரிசனை கொள்ளப்பட வேண்டும்.

அரசாங்கம் இந்தப் பகுதிகளில் எடுத்துள்ள நடவடிக்கைகளை நான் பாராட்டுகின்றேன். வட பகுதியில் தனியார் மருத்துவ மனையில் முதன்முறையாக இருதய சத்திர சிகிச்சை வெற்றிகரமாக தொங்கப்பட்டுள்ளது. இது போன்ற விடயங்கள் மகிழ்ச்சியளிக்கின்றன. ஆனாலும் வட பகுதி மக்களின் வாழவாதாரத்தை முன்னேற்றுவதற்கு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது. அரசாங்கத்தின் இந்த முயற்சிகளுக்கு பிரிட்டன் தொடர்ந்தும் உதவும். முன்னர் எமது திட்டத்தின் கீழ் வடபகுதியில் செயற்படுத்தப்பட்ட பல திட்டங்கள் வெற்றிகரமாகச் செயற்படுகின்றன.

முல்லைத்தீவில், புதுக்குடியிருப்பு மக்களுடன் நான் கலந்துரையாடினேன். அப்போது தமக்கு வீட்டு வசதியின்மை, தொழில் வாய்ப்பின்மை குறித்து அவர்கள் எமக்கு தெரிவித்துள்ளனர் என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இறுதி யுத்தத்தில்...

புகள் நிகழவிருந்த பாரிய மனிதாபிமான துயரத்தை தடுத்து நிறுத்துவதற்கு சிறிய முயற்சியை கூட மேற்கொள்ளவில்லை, அவர்கள் ஆரம்ப கட்டங்களில் பிரச்சினையின் பாரதூரத்தை புரிந்துகொள்ள தவறிவிட்டனர்.

விடுதலைப் புலிகளிடமிருந்து பொதுமக்களை பிரித்து அரசாங்க பகுதிக்கு அவர்களை நகர்த்துவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட தந்திரோபாயமொன்றை அவர்கள் உருவாக்கவில்லை என குறிப்பிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அறிக்கை பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தியதற்காக விடுதலைப்புலிகளை குற்றம்சாட்டுவதுடன் பொதுமக்களின் உயிரிழப்புகளுக்கு அவர்களே காரணம் என தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்க ஐ.நா தவறிவிட்டது. அரசாங்க உத்தரவை தொடர்ந்து ஐ.நா வன்னியிலிருந்து வெளியேறியது கேள்விக்குரிய விடயம் என்றும் அதில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## வட மாகாண...

குச் சென்று யாழ்.ஆயரைச் சந்தித்து நேற்றுக் காலை கலந்துரையாடினார்.

இச் சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்க பிரதிதூதுவர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன் போது பல்வேறு இடங்களிலும் சென்று பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டிருந்தார். இதனைத் தொடர்ந்து நேற்றும் யாழ்.ஆயர் உட்பட பல தரப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்புத் தொடர்பாக யாழ்.ஆயர் கருத்து தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கைவிடுக்கப்பட்டு வந்த நிலையில் சர்வதேச அழுத்தங்களைத் தொடர்ந்து அரசாங்கத்தினால் தேர்தல் நடத்தப்பட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண அரசாங்கம் ஒன்று தற்போது அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இந்த மாகாண அரசாங்கத்தை செயற்படவிடாமல் தொடர்ந்தும் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டு மத்திய அரசாங்கம் முட்டுக் கட்டையாக செயற்பட்டு வருகின்றது. அதே நேரம் மாகாண அரசுடன் மத்திய அரசு ஒத்துழைத்துச் செயற்படாமல் தொடர்ந்தும் முரண்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

இந்நிலையில் இவ்வாறு இங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு இராணுவத் தளபதியான மாகாண ஆளுநரை மாற்ற வேண்டுமென கோரிக்கைவிடுக்கப்பட்டு வந்த நிலையிலும் ஆளுநரை மாற்றாது மீண்டும் அவரது பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறுதான் இங்குநிலைமை இருக்கின்றது. ஆகவே மக்கள் இங்கு சந்தோசமாக இருப்பதற்கு இங்குவொரு திருப்பம் ஏற்பட வேண்டுமென்றும் இதன்போது அமெரிக்கத்தூதுவரிடம் எடுத்துக் கூறியிருந்ததாகவும் ஆயர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## மக்கள் வழிபாட்டினை...

டங்கள் பலவற்றினையும், பேச்சுவார்த்தைகளினையும் நடத்திய அம்மக்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாமல் தற்போதும அடிப்படை வசதிகளற்ற தற்காலிக முகாம்களிலேயே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வலி.வடக்கில் 9 ஆயிரத்து 968 குடும்பங்களினைச் சேர்ந்த 34 ஆயிரத்து 628 பேர் இன்றும் மீள்குடியேற்றப்படாமல் தற்காலிக முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் தம்மை மீள்குடியேற்றக் கோரி சுன்னாகம் சபாபதி நலன்புரி முகாமில் வழிபாட்டு நிகழ்வொன்றினை அம் மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

நேற்றையதினம் அங்கு ஹயஸ் வானில் சென்ற இராணுவ புலனாய்வாளர்கள் இவ்வாறான நிகழ்வினை நடத்த முடியாது என கூறியதோடு அங்கு வழிபாட்டிற்கு ஒழுங்கு செய்யப்பட்ட ஏற்பாடுகளினையும் குழப்பியுள்ளனர்.

இதனால் நேற்று நடைபெறவிருந்த வழிபாட்டு நிகழ்வு நிறுத்தப்பட்டது. இதேபோன்று முன்னொரு முறையும் இராணுவப் புலனாய்வுப்பிரிவின் தலையீட்டால் குறித்த வழிபாடு நிறுத்தப்பட்டு நேற்றைய தினம் மீண்டும் ஒழுங்கு செய்யப்பட்ட நிலையில் அதுவும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## மண்டைதீவு திருவெண்காட்டில் இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்தி விநாயகர் ஆலய வேட்டைத் திருவிழா இன்று இடம்பெறும். இதில் யாழ்ப்பாண சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் யாக்கிரத சைத்தன்ய சுவாமிகள் கீதை காட்டும் பாதை எனும் பொருளில் தெய்வீக உரை நிகழ்த்துவார். (நு)

## காரை நிலா அறிமுகவிழா

(காரைநகர்)

சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் காரைநிலா சிறப்பு மலரின் அறிமுக விழா நாளை 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரத்தின் தலைமையில் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

அறிமுக விழாவில் வாழ்நாள் பேராசிரியர் வே.தருமரட்ணம், பேராசிரியர் வை.பரமேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் கலாநிதி சிவஸ்ரீ.க.வைத்தீஸ்வரக் குருக்கள், டாக்டர் சு.நடராசா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நூல் அறிமுக உரையை எதியோப்பியப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் கலாநிதி வி.கென்னடி நிகழ்த்துவார். (நு)

## கடற்தொழிலாளி...

பில் மேற்படி நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மண்டைதீவு ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த தேவசகாயம் சாள்ஸ் ஞானசீலன் (வயது 47) என்பவர் என இனங்காணப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த சில தினங்களாக நிலவும் சீரற்ற கால நிலைக்கு மத்தியிலும் யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியிலிருந்து கடந்த புதன்கிழமை பிரஸ்தாப குடும்பஸ்தர் படகொன்றில் கடலுக்கு சென்று கடற்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்.

இதன்பின்னர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அல்லைப்பிட்டி புங்குடுதீவுக் கடற்பரப்பில் படகொன்று தனியே மிதப்பதைக் கண்ட அப்பகுதி தொழிலாளர்கள் படகை மீட்டுக் கரைசேர்த்ததுடன் இந்தப் படகு யாருடையது எனத் தேடியும் இருந்தனர்.

இதன்பின்னர் இந்தப் படகு மண்டைதீவைச் சேர்ந்த தொழிலாளர் ஒருவருடையது என இனங்காணப்பட்டிருக்கின்றது. இதனைத் தொடர்ந்து உறவினர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டு குறித்த குடும்பஸ்தரைத் தேடி வந்திருக்கின்றனர்.

இந்நிலையில் நேற்றுவெள்ளிக்கிழமை காலை மண்டைதீவுக் கடற்கரை அண்மித்த கடற்கரையோரப் பகுதியில் தண்ணீர் அள்ளச் சென்றவர்கள் கரையில் சடலமொன்று இருப்பதனை இனம் கண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து சம்பவத்தை அறிந்து அங்கு வந்த உறவினர்கள் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சடலம் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

**வீடு வாடகைக்கு உண்டு**

இல.95 மானிப்பாய் வீதி, குருசுமதவடி ஆனைக் கோட்டை, யாழ்ப்பாணம்.

தொடர்பு:-0756942843

(மி-843)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டார் நாட்டின் முன்னணி நிறுவனங்களில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு!

| | |
|---|---|
| Driver-Camco International School | Qr.1200+Accommodation |
| Driver-Heavy (GCC Valid Licence) | Qr.2000+OT |
| Graden Helper | Qr.1000+OT (Age 30-55) |
| Furniture Carpenter | Qr.1300+OT+Food |
| Super Market & Hospital Cleaner | Qr.800+OT |
| Meson | Qr.1300+OT |
| Plumber | Qr.1300+OT |

தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.

**இடம்:- உதயன் விருந்தினர் விடுதி**

**No.20, கன்னாதிட்டி வீதி, காளி கோவிலடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

**காலம்:- (நாளை) 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்: காலை 9.00 மணி தொடக்கம்**

**பிற்பகல் 2.00 மணி வரை**

ஆவணங்கள்:- கடவுச்சீட்டு, புகைப்படங்கள், சுயவிபரக்கோவை களுடன் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

உடன் தொடர்பு கொள்ள:-

Lanka Voice-Jaffna 0779527575

Lanka Voice-Mannar, Vavuniya. 0766697789

(C-8413)

**Capital Recruitment International (Pvt) Ltd**

**No.130 3/1, Grand Pass, Colombo-14.**

L/L.No.2248



## சவுதி ராஜ்ஜியத்தில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் அதியுயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்புகள் உடனடியாக காணப்படுகின்றன

| | | |
|---|---|---|
| Finishing Carpenters | 33 | 1000-1500+OT |
| Electrician | 35 | 900-1400+OT |
| Plumbers | 36 | 900-1400+OT |
| Forman | 04 | 1900-2200+OT |
| Painters | 03 | 1000-1400+OT |
| Tiles setters (Meson) | 01 | 1000-1400+OT |
| Meson | 01 | 1000-1400+OT |
| Store Keeper ware house | 01 | 1400-1800+OT |
| Maintenance Helper | 10 | 800-950+OT |

தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்

**இடம்:- உதயன் விருந்தினர் விடுதி**

**No.20, கன்னாதிட்டி வீதி, காளி கோவிலடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

**காலம் :- (நாளை) 07ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்: காலை 9.00 மணி தொடக்கம்**

**பிற்பகல் 2.00 மணி வரை**

கடவுச்சீட்டு, புகைப்படங்கள், சுயவிபரக் கோவை முதலிய ஆவணங்களுடன் உங்கள் விண்ணப்பங் கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

உடன் தொடர்பு கொள்ள

Lanka Voice-Jaffna 0779527575

Lanka Voice-Mannar, Vavuniya. 0766697789

(C-8413)

**ARABIAN GULF ENTERPRISES**

**No-72/26, Srisangarajamawatha Colombo-10.**

Reg.No.969


### வடக்கிற்கு...

கின்றார்கள்.

குறிப்பாக நான் ஒரு கூட்டத்திற்கும் சென்றால் படம் எடுக்கின்றார்கள். எல்லா வித மான படங்களி னையும் எடுக்கின் றார்கள்.

அதாவது, எமது உடல் அசைவுகள் (Body Language) எமது உடல் அசைவு கள் அனைத்தினை யும் அவர்கள் கண் காணித்து வருகின் றார்கள்.

இவ்வாறான வட யங்கள் இங்கு நடை பெறுவதாக நான் ஜேர்மனிய உயர்ஸ் தானிகரிடம் எடுத்து கூறினேன் அதற்கு அவர்தானும்இதனை அவதானித்துள்ளதாக வும்நான்இங்கு (வடக கில்) விஜயம் செய்த போது தனக்கு பின் னாலும் புலனாய்வுப் பிரிவினர் பின் தொடர்ந் ததோடு நான் கலந்து கொள்ளும் இடங்களி லும் புலனாய்வு பிரி வினர் புலனாய்வு நடவடிக்கையில் ஈடு பட்டதாகவும் அவர் என்னிடம் கூறியிருந் தார்.

எமது நிர்வாகத் தில்மேம்பாடுகள்ஏதும உள்ளனவா எனகேட்

19 ஆம் பக்கம் பார்க்க....


சந்நிதியின் அருளால் ஆரோக்கியம் தழைக்கட்டும்



மாபெரும் அறிமுக விற்பனை

**Sylo ICE CREAM**



பால், வெண்ணை, தேன், பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை, அத்திப்பழம் போன்ற இயற்கையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த புதிய தலைமுறை அம்சங்களுடன், TCT, Preser Vative இரசாயனங்கள் சேர்க்காமல் அதிஉயர் தொழில் நுட்ப முறையில் உங்கள் ஆரோக்கியத்தின் மீது அக்கறையுடன் தயாரிக்கப்படும் ஐஸ்கிறீம் வகைகள் அறிமுகவிலையில்!

Hot Line:-0777710785

Phone:-021 221 2003

சந்நிதியின் கோவில் முன்புறம் எமது விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்

விசேட வைபவங்களுக்கு ஐஸ்கிறீம் ஓடர்கள் சிறந்த முறையில் வழங்கப்படும்

Factory

இல.76 அம்மன் கோவில் வீதி

கொக்குவில் கிழக்கு.யாழ்ப்பாணம்

(7548)



## மாபெரும் வேலைவாய்ப்பு

**A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே......**

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் காப்புறுதித் துறையில் பணி யாற்றுவதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விண் ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**தகுதி**

- O/L இல் 6 பாடங்களில் சித்தி
- அரச, தனியார் துறையில் ஓய்வு பெற்றவர்கள்
- பகுதி நேரம் தொழில் புரிய விரும்புபவர்கள்

விண்ணப்ப முடிவுத் திகதி - 20.09.2014

முகவரி: முகாமையாளர் சிறிலங்கா இன்சூரன்ஸ் இல.31, A9 வீதி, கிளிநொச்சி.



## BIOLOGY A/L

Tamil and English Medium
Personal and Group Classes
Propper and Repeaters (7595)

CHAVAKATCHERI, JAFFNA and KILINOCHCHI

T.P : 0773063521, 0710466594



INSTITUTE OF INFORMATICS STUDIES

கா.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே !

மிகக் குறுகிய காலத்தில் உங்கள் எதிர்காலத்திற்குரிய வழியை செம்மைப்படுத்திக் கொள்ளுங்கள்

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 2014 செப்டம்பர் 14,15 காலை 10 மணி**

- Engineering Drawing & AutoCAD
- Android Apps Development
- Computerized Accounting Package
- Programming in C / C ++ / Java
- Certificate in English Language

Office Solution Development · Desktop Publishing · Multimedia · Networking

தொடர்புகளுக்கு:
100
மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்.

021 222 28 31
077 666 16 06

IIS

"கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS இல் இணைவதன் மூலம் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப் படுகின்றீர்கள்."

(C-8430)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.